தமிழும் கலப்படமும்

10846

ம.பொ.சிவஞானம்

(1960)

இன்ப நிலையம்

தமிழும் கலப்படமும்

ம.பொ.சிவஞானம்

இன்ப நிலயம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு : மே, 1960.
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

விலை ரூபாய் ஒன்றரை

சாந்தி, பிரஸ், சென்னை-1.

பதிப்புரை

தமிழில் பிறமொழிச் சொற்கள் வரம்பின்றிக் கலக்கத்தான் வேண்டும். அது முத்தும் பவளமும் கலந்தது போல் இருக்குமென்று சிலர் கூறுகின்றனர்.

தமிழில் பிற மொழிச் சொற்கள் கலக்கவே கூடாது. அது தமிழை உருக் குலைத்துவிடும். தமிழின் தனிமையை—தூய்மையைக் காக்க வேண்டும் என்கின்றனர் சிலர்.

மேற்கண்ட இரு சாராரின் கூற்றிலும் இருக்கும் உள் நோக்கங்களையும், அதனல் ஏற்படும் நன்மை - தீமைகளையும் விளக்கி திரு. ம. பொ. சி. அவர்கள் "செங்கோல்" வார இதழில் "தமிழும் கலப்படமும்" என்ற தொடர் கட்டுரையை எழுதி வந்தார்கள்.

திரு. ம. பொ. சி. அவர்கள் எந்தப் பிரச்சனையையும் தீர்க்க திருஷ்டியோடு ஆராய்ந்து, தமக்குச் சரியெனப்படுவதை — தயக்கமின்றி ஆணித்தரமாகக் கூறி வருபவர்கள். அதனால் அன்னாரின் கருத்துக்குப் பெரு மதிப்பு உண்டு.

"தமிழும் கலப்படமும்" என்ற இந் நூலிலும் தமிழ் வளர்ச்சிக்கு உபயோகமான பல கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். இந்நூலை வெளியிடும் வாய்ப்பை அளித்த திரு. ம. பொ. சி. அவர்களுக்கு எங்கள் நன்றி.

சோம. சுவாமிநாதன்

இன்ப நிலையம்

சென்னை
30-4-'60

இரு 'துருவங்கள்!'

மக்களிலே, ஆக்க வழியில் பணிபுரியும் ஊக்க மில்லாதார், வம்புகளிலும் வாதுகளிலும் ஈடுபடுவது இயற்கை. ஏதேனும் ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து, அதிலே திறமை பெற்று, அதன் வளர்ச்சிக்குத் தொண்டு புரிவோர், வாதுகளை விரும்புவதில்லை; வம்புகளை அறவே வெறுப்பர். இவை, அனுபவத்தில் நாம் அறிந்துள்ள உண்மைகள்.

தொண்டை மறந்த சண்டை !

தமிழ் வளர்ச்சிக்கெனப் பணிபுரிவோர் பல்லோர் நம்மிடையே வாழ்ந்து வரும் பேற்றினை இற்றைத் தலைமுறையினராகிய நாம் பெற்றிருக்கிறோம். வாழையடி வாழையாகத் தோன்றிவரும் அத்தொண்டர்களால்தான் தமிழ்

வளர்கிறது; வாழ்வாங்கு வாழ்கிறது. வேறு சிலர் வம்பு பேசி, வழக்காடி, வாதப்போர் புரிந்து தமிழை வளர்க்க முயல்கின்றனர்.

* தமிழ், பைஸாஸ பாஷை; சம்ஸ்கிருதம் தேவ பாஷை. தமிழ் அபிவிருத்தி அடைந்ததும், அது இன்னுள் வரை ஜீவித்து வருவதும் வட மொழியால்தான். வேதாந்த, சித்தாந்த சாஸ்த்ர பூஜா விதிகளையும், ஸ்தோத்ர பூஜா விதிகளையும், தவயோக ஸாதனங்களையும், நாடக-நாட்டிய கலா ஞானங்களையும் தமிழர் சம்ஸ்கிருதத்திட மிருந்தே ஆஸ்ரயித்துக் கொண்டனர். அதனுல், சம்ஸ் கிருதப் பதங்களை, லிபிகளைத் தமிழில் வெகுவாக ஸம்பந்தப்படுத்தி தமிழைப் போஷிக்க வேண்டும் என்கின்றனர் ஒரு சாரார்.

இவர்கள் கலப்படக்காரர்கள்.

* தமிழர்க்கு சமக்கிருதப் பாடை வேண்டாம்; அந்தப் பாடையில் உள்ள இலக்கியங்களை, சமய சாத்திரங்களைத் தமிழில் மொழி பெயர்க்கத் தேவையில்லை. வடமொழிச் சொற்கள்கூட தமிழில் கலத்தல் கூடாது; கூடவே கூடாது. தமிழ், தனித்தியங்கும் மொழி; தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளின் தாய்மொழி. ஆகவே, தமிழின் தனிமையை, தூய்மையைக் காத்தல் தமிழர் கடன்-என்கின்றனர் ஒரு சாரார்.

இவர்கள், தனித் தமிழ்க் கட்சியினர்.

இந்த இரு சாராருமே, தமிழைத் தாய்மொழியாகவும், தமிழகத்தைத் தாயகமாகவும் பெற்றிருக்கின்றனர்.

இவர்களில் எந்த ஒரு சாராரும் தமிழகத்திற்கு, தமிழுக்கு அந்நியரல்லர் எனினும், 'தமிழர்' என்ற இன உணர்ச்சி பெற்ருேர், தாய்மொழியான தமிழிலே ஆழ்ந்த பற்றுடை

யோர், தமிழின் வளர்ச்சிக்குப் பணிபுரிவோர் எவரும் இந்த இரு சாராருடைய கருத்துக்களையும் அப்படியே ஏற்க் மறுப்பது இயற்கை.

முன்னவர், பேச்சுமொழி அல்லாத வடமொழியின்பால் வரம்பு கடந்த 'பக்தி' கொண்டு, 'களை' யெடாமல், தாய்மொழிப் பற்று என்னும் நீர் விடாமல், இலக்கண மரபு என்னும் வேலி கட்டாமல் தமிழ்ப் பயிரை வளர்க்க விரும்புகின்றனர். பின்னவர், வடமொழியின்பால் தாம்கொண்ட 'பகைமை' என்னும் 'நஞ்சை' எருவாக்கித் தமிழ்ப் பயிரை வளர்க்க முயல்கின்றனர்.

புலமையற்றோர் போராட்டம்!

இந்த இரு வேறுபட்ட கருத்துக்கள் நீண்ட நெடுங்காலமாகவே தமிழகத்தில் நிலவி வருகின்றன. முற்றிலும் மொழியோடு மட்டுமே தொடர்புடைய இந்த வழக்கில், சாதி வெறுப்பும், சமய எதிர்ப்பும், நாத்திக உணர்வும், அரசியல் கட்சி வளர்க்கும் உள்நோக்கும் கலந்துவிட்டன. அதனால், தமிழிலோ அல்லது வடமொழியிலோ மிகுந்த புலமையுடையோரேயன்றி, இருமொழிகளில் எந்த ஒரு மொழியிலும் அற்ப சொற்பப் புலமைகூட இல்லாதவர்களும் 'பட்டிமன்றம்' ஏறுகின்றனர்! வாதம் வாய்ச் சண்டையாக மாறி, 'வால்க'—'ஒலிக' என்ற ஒலிகளும் எழும்பக் கேட்கிறோம்.

இருசாராரில், எந்தச் சாராருடைய கருத்து ஏற்கத் தக்கது? இதனை ஆராய்ந்து முடிவுகாணு முன்னர், சட்டஞான மற்றோர் நீதிமன்றத்தில் தோன்றி வழக்காடுவது போல, இரு மொழிகளில் எந்த ஒரு மொழியிலும் புலமையற்றோர் இதில் 'வழக்கறிஞராக'த் தோன்றுவதை முதலில் விலக்க வேண்டும்.

விலக்குவதற்கு முன்பு, அத்தகையோர் யார் என்பதைத் தெரிந்து கொள்வதும், அவர்கள் உண்மையிலேயே வடமொழி கலவாமல், தூய தமிழில் எழுதவும் பேசவும்

விருப்பமுடையவர்களா ? - என்பதைப் புரிந்துகொள்வதும் கடமையாகும்.

கட்டுச் சோற்றில் எலி !

சம்ஸ்கிருதப் பகைமையை எருவாக்கி தமிழ்ப் பயிரை வளர்க்க விரும்புவோர், எங்கு-யாரால் வடமொழிக்கு எதிர்ப்புக் காட்டப் பெற்றாலும், அங்கு-அவர்களுக்குத் துணை புரியத் தோன்றி விடுகின்றனர். "வடமொழியின் தாக்குதலி லிருந்து தமிழைக் காக்கும் வீரர்கள் நாங்கள்தான்" என்றும் பறை சாற்றிக் கொள்கின்றனர். இது உண்மை யாயின், "பிறமொழிப் பகைவேண்டாம்" என்று அறிவுரை கூறி, அவர்கள் தமிழின்பால் வைத்துள்ள பற்றுதலை நாம் பாராட்டலாம். ஆனால், இவர்களின் தமிழ்ப் பற்று ஐயத்திற்கிடமானது.

'திராவிடம்' பற்றிக் கால்டுவெல்

வடமொழியின்பால் தீராப் பகைமை கொண்டவர் போல் நடிக்கும் இவர்கள், தங்களைத் 'திராவிடர்' என்று கூறிக்கொள்கின்றனர். 'த்ராவிடம்' என்பது வடமொழிச் சொல்லாகும். இதோ, ரெவரண்டு ராபர்ட் கால்டுவெல் டி. டி. எல். எல். டி. கூறுவதைக் கேளுங்கள் :

> " வடமொழியில் தென்னிந்திய மொழியினத்தைக் குறிப்பதற்குப் பண்டை நாளில் வழங்கப் பட்டதாகத் தெரியக் கிடப்பது 'ஆந்திர-திராவிட பாஷா' என்ற சொற்றொடரேயாம். 'தெலுங்கு-தமிழ்மொழி' என்பது அச்சொற்றொடரால் போந்த பொருள்............ சிறந்த வடமொழி வாணரான குமாரில பட்டர் என்பார் இச் சொற்றொடரை முதன் முதலாக எடுத்தாண்டுள்ளார்."

"மனு ஸ்மிருதியில் 'திராவிடம்' என்ற சொல் ஏனைய தென்னிந்திய மக்கள் அனைவரையும் குறித்து நிற்பது......பெறப்படும். இனி, ஸ்மிருதி காலத்திற்குப் பின்னர் வந்த மொழியாராய்ச்சி யாளர்களும் 'திராவிடம்' என்ற சொல்லை தென்னாட்டு மொழியினத்தைக் குறிப்பதற்கே எடுத்தாண்டுள்ளனர்."

"பாகத மொழித் தொகுதியில் 'திராவிடி' என்னும் பெயரால் திராவிட மொழியினம் சேர்க்கப் பட்டுள்ளது."

"வடமொழி மூல நூல்களைத் தொகுத்து ஆங்கிலத்தில் வெளியிட்ட ஜே. மூர் என்னும் பேராசிரியர், 'சம்ஸ்கிருத மூலங்கள்' என்ற நூலில் எடுத்துக் காட்டியுள்ள மேற்கோள் ஒன்றில் 'திராவிடம்' என்பது 'விபாஷை (சிறு பாகதம்)' என்று வடமொழி வாணர் ஒருவரால் குறிக்கப் பட்டுள்ளது. மற்றொரு வடமொழி வாணர் திராவிடர்களுடைய மொழி 'திராவிடி' என்று கூறியுள்ளார்."

"பண்டை நாட்களில் வட நாட்டவரால் 'திராவிட மொழிகள்' என்று குறிக்கப்பட்டது."

இவை, "கால்டுவெல் ஒப்பிலக்கணம்" என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டவையாகும். அந் நூலை, பன் மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் தமிழில் மொழி பெயர்த்துள்ளார் என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

மேற்காட்டிய சான்றுகளால் 'திராவிடம்' என்னும் சொல் சங்க இலக்கியங்களிலோ தனித் தமிழ் நூல்களிலோ இல்லாத ஒன்றென்பதும் வடமொழியாளர் தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ் நிலத்துக்கும் வைத்த இரவற் பெயர் என்பதும் நன்கு விளங்கும்.

நாவலர் விடுத்த வினா?

இதுபற்றிப் பெரும் புலவர் திரு. இரா. இராகவையங்கார் 'தமிழ் வரலாறு' என்ற தமது நூலில் கூறுவதையும் பார்ப்போம்:

> "வட மொழியாளர், த்ரமிளர் எனத் தமிழ் மொழியாளரையும், த்ரமிளம், த்ராவிடம் என அவர் நாட்டினையும் மொழியையுங் குறித்தனர்."
>
> "துரத்து எனப் பொருள்படும் 'த்ரு' என்னும் வடமொழி வினைப் பகுதியினடியாகத் தோன்றிய திராவிடம் என்னும் வடசொல் துரத்தப் பட்டதென்று பொருள்படும்."

இதனல், தமிழர், வடக்கேயிருந்த ஆரியரால், அங்கிருந்து துரத்தப்பட்டவர் என்ற பொருளில் 'த்ராவிடம்' என்னும் சொல் வழங்கப்பட்டது புலனுகும். இப்படி, வட மொழிச் சொல்லாகவும், தமிழருக்கு இழிவு தரும் பொருளைக் கொண்டதாகவும் உள்ள 'த்ராவிடர்' என்னும் பெயரைத் தமக்குச் சூட்டிக் கொண்டுள்ளோர், உண்மையிலேயே தனித் தமிழின் காவலர்களா? இது, நாம் விடுக்கும் கேள்வியன்று. 'தனித்தமிழ்'ப் பற்றுளர்களால் போற்றி, புகழப்படும் நாவலர் சோமசுந்தர பாரதியார் கேட்கின்றுர்:

> "தமிழ் இனத்தவரை 'திராவிடர்' என்பது வடவரும் குடவரும் வைத்த புது வழக்கு."
>
> "தமிழருள் சிலர் மட்டும் இப்போது சில காலமாகத் தம் நாட்டைத் 'திராவிட நாடு' எனவும், தம்மைத் திராவிடர் எனவும் பேசக் கூசவில்லை; அதுமட்டோ? அதுவே, பெருமை எனவும், தமிழர், தமிழ் நாடு என்பது தகாத தவறு எனவும் கருதுகின்றனர். இந்த மனப்பான்மை ஒரு தமிழனுக்கு வரலாமா? வருவது சரிதானு?"

இது, 1948-ஆம் ஆண்டில், கோவை நகரில் 'முன்னேற்றத் திராவிடர்'களால் நடத்தப்பெற்ற முத்தமிழ் மாநாட்டில் நாவலர் பாரதியார் நிகழ்த்திய தலைமையுரையிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

உண்மை என்னவென்றால், தமிழ் மொழியின் தனித் தன்மையைக் காப்பதில் தங்களுக்கு அக்கறை இருப்பதாக இவர்கள் பறைசாற்றிக் கொள்வதெல்லாம் கட்சி வளர்க்கும் சூழ்ச்சிதான்.

தங்கள் கட்சியின் வளர்ச்சிக்கு—கட்சியின் முன்னணியில் உள்ள தலைவர்களின் வாழ்வுக்கு—எது எது எல்லாம் நன்மை தருமோ அதை அதை எல்லாம் பயன்படுத்திக் கொள்வது இவர்கள் நோக்கம். அதில் ஒன்று, 'தனித் தமிழ்'க் கிளர்ச்சி.

நாத்திகத்தின் எதிரொலி !

தனித் தமிழ்க் கட்சியினரில் சிலர், சமய நம்பிக்கை இல்லாதவர்கள். ஏன் ? தெய்வ நம்பிக்கையும் அற்றவர்கள். அவர்கள் கொண்டுள்ள வடமொழிப் பகைமை, நாத்திக உணர்வின் எதிரொலியே !

'கம்ப ராமாயணம்'—என்றால், 'அது வடமொழியின் வழி நூல். அதனைப் படிக்கவேண்டாம். தீயிட்டுக் கொளுத்துங்கள்' என்பார்கள்.

தமிழில் தோன்றிய முதற் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தைப் படிக்கலாமென்றால், 'வடமொழியாளர் கூறிய சாத்திரங்களும் சமய நெறிகளும் சிலப்பதிகாரத்தில் ஊடுருவி விட்டன. அதனால், அதுவும் வேண்டாம்' என்பார்கள்.

அப்பரும் திருஞான சம்பந்தரும் பாடிய தேவாரங்களைப் பயிலலாம் என்றால், 'ஆரிய மதக் கோட்பாடுகளும், நம்பிக்கைகளும் அவற்றில் வலியுறுத்தப்படுதலால், அவையும் வேண்டாம்' என்பார்கள்.

சுருங்கச் சொன்னால், வடமொழிமீது வெறுப்பை வளர்ப்பதன் மூலம் தங்களுடைய நாத்திக நஞ்சினை நாட்டு மக்களுடைய நெஞ்சங்களிலெல்லாம் புகுத்திவிடலாம் என்பது அவர்கள் நம்பிக்கை.

தமிழின் வளர்ச்சிக்காகவே, அதில் வடமொழிச் சொற்கள் கலக்கக் கூடாதென்ற கொள்கை யுடையவர்களானால், தங்களுக்குத் '*திராவிடர்*' என்ற வடமொழிப் பெயரைச் சூட்டிக் கொள்வானேன் ?

'கதை'யை வளர்க்கத் தேவையில்லை. முற்றிலும் மொழி சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையில், கட்சி உணர்ச்சியையும் நாத்திகப் புத்தியையும் கலப்பதற்கு அனுமதிக்காமல் இருப்போமாக! அதற்கான ஒரேவழி, "தமிழில் பிறமொழிச் சொற்கள் கலக்கலாமா? கலக்கக்கூடாதா?" என்ற விவாதத்தில், நாத்திக உணர்வோடு வட மொழியை எதிர்த்து, தமிழை ஆதரிப்பதுபோல் நடித்துவரும் இயக்கத்தினரை விலக்கி வைப்பதுதான். அவர்களையும் சேர்த்துக் கொண்டு இந்த விவாதத்தை நடத்துவது கட்டுச் சோற்றுக்குள் எலியை விட்டதுபோலாகும். அது வேண்டாம்.

புலவர்களின் போர்க்கோலம்!

அடுத்து, இந்தப் பிரச்சினையில் நமது கவனத்தைக் கவர்ந்து நிற்போர் தமிழ்ப் புலவர் பெருமக்களாவர். இவர்களில் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலக்கக் கூடாதென்ற கொள்கையுடையோர் தமிழ் மொழியின் தனித் தன்மையைக் காப்பதற்கே அப்படிக் கூறுகின்றனர். அதில் நமக்குச் சிறிதளவும் ஐயமில்லை. அத்தகைய புலவர்களில் முன்னணியில் நிற்போர், திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும், சுவாமி வேதாசலமும் ஆவர். அந்த இரு பெரியார்களும் தங்கள் தாய் மொழியான தமிழிலே ஈடு இணையற்ற புலமையுடையவர்கள். காலமெல்லாம் தமிழின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்கள். இவர்களை அணுகுவோம்.

'தனித் தமிழி'ன் தடுமாற்றம்!

அறிஞர் திரு. சூரிய நாராயண சாஸ்திரியார், தமிழிலே வரம்பு மீறி வடமொழிச் சொற்கள் கலப்பதை வெறுத்தார். அவர் எழுதியுள்ள "தமிழ்மொழி வரலாறு" என்ற நூலைப் படித்தோர் இதனை யறிவர். ஆனால், தேவைப்படும் இடங்களில் கூடப் பிறமொழிச் சொற்கள் கலக்கக் கூடாதென்பது அவருடைய கொள்கையென்று நாம் நம்பவில்லை. சான்றாக, திரு. சாஸ்திரியார், தாம் எழுதிய நாடக நூல் ஒன்றுக்கு "*ரூபாவதி*" என்ற வடமொழிப் பெயரை வைத்துள்ளார். அதில் வரும் பதினான்கு பாத்திரங்களில், வடமொழிப் பெயர்களைத் தாங்கிய பாத்திரங்கள் பதின்மூன்று.

சற்குணன், சூரசேனன், வீரேந்திரன், சுசீலன், நயவசநன், சுந்தரானந்தன், சுகுமாரன், சந்திரமுகன், வித்தியா சாகரர், ஞானதீபர், ஆன்மதீரர், தந்திரதீரர், சுந்தரி, கோமளவல்லி, ரூபாவதி, அம்புஜாட்சி, கநகமாலே. இவை வடமொழிப் பெயர்கள். இந்த நாடகத்தில் வீதி காப்போனுக வருகின்றஒரு பாத்திரத்திற்கு மட்டும் ' முருகன் ' என்ற தமிழ்ப் பெயரைச் சூட்டியுள்ளார்.

அவர் இயற்றிய மற்ருெரு நூலுக்கு '***மான விஜயம்***' என்று பெயரிட்டுள்ளார். இது வடமொழிப் பெயர் என்பது சொல்லாமலே விளங்குகிறதல்லவா ?

'***கலாவதி***' என்பது, அவர் இயற்றிய மற்ருெரு நாடக நூலின் பெயர். இது வடமொழிப் பெயருடைய நாடகம் என்பது ஒருபுறமிருக்க, இதில் வரும் பதினுறு பாத்திரங்களும் வடமொழிப் பெயர்களேயே தாங்கி நிற்கின்றன.

ஜயதுங்கன், சுகேசன், நேதாந்தி, சன்மதி, சுதானந்தன், சத்தியப்பிரியன், விகடவசனன், புலாந்தகன், சுகசரீரன், சுயம்பிரகாசர், சோமதத்தன், ஆனந்தவல்லி, கலாவதி, வாசந்திகை, மனேமோகினி, மரகதம்.

'பரிதிமாற் கலைஞர்' பேசுகிருர் !

நம்மிடையே வாழும் 'தனித் தமிழ்'க் கட்சிக்காரர்களில் சிலர், சூரியநாராயண சாஸ்திரியாரைத் தங்கள் வழிகாட்டியாகக் கொண்டு வழிபடுவோரும் உண்டு. அப்பெரியார், '***சூரிய நாராயண சாஸ்திரி***' என்ற தமக்குள்ள வடமொழிப் பெயரை, "***பரிதி மாற் கலைஞன்***" எனத் தூய தமிழில் மாற்றிக்கொண்டார் என்றும் ஒரு 'கதை' உண்டு. இதுபற்றி அவரே கூறுகிருர், கேளுங்கள் :

> "......இப்பாசுரங்களிற் சில புதுக் கருத்துக்கள் காட்டியிருக்கின்றமை பற்றி அஞ்சுவேம், எமது மெய்ப் பெயரின் வெளியிடாது பரிதிமாற் கலைஞன் என்னும் புனைவுப் பெயரின் வெளியிடுவே

மாயினம். அன்றியும் நன்னூலொன்று செய்தானது புகழின்மையான் இகழப்பட்டொழிதலும், புன்னூலொன்று செய்தானது உணர்ச்சியாற் சாலவும் புகழப்பட்டிலங்கலும் நாடொறுங் காண்டலின் இந்நூலைப் பற்றிய தமிழ் மக்களின் உண்மை மதிப்பு இணைத்து என்றுணர வேண்டியும் அவ்வாறு செய்ய விரும்பினேம்......"

இவ்வாறு திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தாம் எழுதிய 'தனிப்பாசுரத் தொகை' என்ற நூலின் இரண்டாம் பதிப்பின் முகவுரையில் கூறியுள்ளார்.

பெற்றோரிட்ட பெயர்கள் 'ரிப்பேர்!'

இதிலிருந்து, திரு. சாஸ்திரியார் தமது பெயரைத் தூய தமிழில் மாற்றிக்கொண்டதற்கும், வடமொழி வெறுப்பிற்கும் கொஞ்சமும் தொடர்பில்லை என்பது விளங்கும். மற்று, தம்முடைய நூல்களுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரைகளின் இறுதியில் "வி. கோ. சூ" என்றே கையொப்பமிட்டுள்ளார். இந்நாளில் தாய்-தந்தையர் வைத்த, அவர்கள் அன்பு கனிந்த நெஞ்சோடும் ஆர்வத்தோடும் அழைத்த பேர்களையெல்லாம் 'ரிப்பேர்' செய்துகொள்ளும் பலரைப் பார்க்கிறோமல்லவா? அவர்களுக்கு, திரு. 'வி. கோ. சூ' சாஸ்திரியார் வழிகாட்டியல்லர். உண்மையான தமிழ்ப் பற்றோடு பழைய புலவர்கள், மன்னர்கள் பெயரைத் தங்களுக்குச் சூட்டிக்கொள்வோரை நாம் குறை கூறவில்லை. இந்தப் பெயர் மாற்றத்துக்கு பிற மொழிப் பகைமை அடிப்படையாக இருக்கக்கூடாதென்பதே நம் கொள்கை.

தமிழை வாழ்வித்த வள்ளல்

திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தூய தமிழில் எழுதும் ஆற்றல் படைத்தவர் என்பதில் நமக்கு ஐய

மில்லை. அந்த ஆற்றலைக் குறைத்துக் கூறுவதும் நம் குறிக்கோளன்று. தமிழ்மொழி, பிறமொழிச் சொற்களால் ஊடுருவப்பெற்று, உருக்குலைந்து போகக்கூடா தென்பதில் திரு. சாஸ்திரியாருக்கு இருந்த உறுதிப் பாட்டையும் நாம் சந்தேகிக்கவில்லை. ஆனால், தேவைப்படும் இடங்களில் பிற மொழிச் சொற்கள் தமிழில் கலக்கலாம் என்பதற்கு அவருடைய நூற்களே சான்றாக நிற்கின்றன என்பதை நினைப் பூட்டுகின்றோம்.

திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்; தமிழில் ஆழ்ந்த பற்றும் பாண்டித்தியமும் உடையவர். ஆனால், பிற மொழிகளின் பகைவரல்லர். பிறமொழிச் சொற்கள் சில தமிழில் கலத்தலால், தமிழ்மொழி அழிந்தொழிந்துவிடும் என்று அஞ்சுபவரும் அல்லர் என்பதனை அறிந்தோம்.

மேலும் அப்பெரியாரைப்பற்றி ஆராயுமுன்னர், அவரது வரலாற்றைத் தெரிந்துகொள்வது நலம்.

திரு. வி. கோ. சூ. சாஸ்திரியார், ஆங்கிலத்தில் பி. ஏ. பட்டம் பெற்றவர். தமிழிலும் வடமொழியிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பூரண தேர்ச்சியுற்றுப் பரிசுகளும் பதக்கங்களும் பெற்றவர். தமிழில் நாடக இலக்கண நூல் இல்லாதிருந்த குறையை அகற்ற 'நாடக இயல்' என்ற நூலை இயற்றியருளினார். சென்னைக் கிருத்துவக் கல்லூரித் தலைவர் வில்லியம் மில்லர் என்பார், தத்துவ போதகர் பதவியை ஏற்குமாறு இவரை அழைத்த போது, அதனை மறுத்துத் தமிழாசிரியர் வேலையை தாமே கேட்டுப் பெற்றார். தமிழில், நாடக நூற்கள் சிலவற்றை இயற்றி, அந்த நாடகங்களில் தாமே கதாநாயகி வேடந் தாங்கி நடித்துள்ளார். ஏராளமான கவிதைகளையும் எழுதியுள்ளார்.

இந்தியா முழுவதிலுமுள்ள வடமொழிப் பற்

ருளர்கள் ஒன்றுகூடி, "இந்திய மொழிகளில் சமஸ் கிருதம் ஒன்றுக்கே பல்கலைக் கழகங்களில் இட மளிக்க வேண்டுமென்றும், மாநில மொழிகளை யெல்லாம் பாடப் பகுதிகளிலிருந்து நீக்கிவிடவேண் டும் என்றும், மத்திய சட்டசபையில் ஒரு பிரேரணை கொண்டுவரத் தூண்டினர். அப்பிரேரணையை சென்னை பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி அதன் கருத்தைத் தெரிவிக்குமாறு கோரினர், அப்போது கவர்னர்-ஜெனரலாக இருந்த லார்டு கர்ஸான். சென்னை பல்கலைக்கழகமோ, மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நாடி, அதன் கருத்தை அறிய விரும்பி யது. அதுகாலை, திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியின் விளைவாக, பல்கலைக் கழகங்களில் மாநில மொழிகள் இடம் பெற்றிருக்க வேண்டும் எனக் கூறியதோடு, கட்டாய மொழியாகவும் இருக்கவேண்டும் என்று மதுரைத் தமிழ்ச் சங்கம் முடிவு செய்தது. அம்முடிவு ஏற்கப்பட்டதால், தமிழ் மொழிக்கு வந்த ஆபத்து தவிர்க்கப்பட்டது.

இவ்வாறெல்லாம் தமிழுக்குப் பணிபுரிந்த பரிதிமாற் கலைஞர் அவர்களுடைய கருத்துக்களைத் 'தனித் தமிழ்'க் கட்சியார் மதிப்பார்கள் என்று நம்புகிறோம்.

பண்டிதரும் பாமரரும்

'பேச்சு நடைக்கும் எழுத்து நடைக்கும் அதிக வேற் றுமை இருக்கக் கூடாதென்பது பரிதிமாற் கலைஞரின் கொள்கை.

"பண்டிதர் தமிழும், சாமானியர் தமிழும் பெரிதும் வேறுபடுகின்றது. அது மிகாதிருக்கும் பொருட்டு நேரிய வழிகளை நாட வேண்டும்"

என்கிறார் சாஸ்திரியார். அவருடைய காலத்தில், நூற்களை எழுதி வெளியிடுவோர் தமிழ்ப் பண்டிதராகவே இருந்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

பண்டிதர் நிலைக்கு சாமானியர் உயர்வது எளிதன்று ஆதலால், சாமானியர் நிலைக்குப் பண்டிதர் இறங்கி வர வேண்டும் என்பதை,

> "பண்டிதர்கள் தமது உயரிய நடையி னின்றும் இறங்கி சாமானிய ஜனங்களை பாஷை உணர்ச்சியில் உடன்கொண்டு செல்ல வேண்டும். இதுவரை அங்ஙனம் செல்லாமையால், தமிழ் பாஷை, வளர்ச்சியின்றி, ஒரு 'நிலைப்பாடு' எய்தி விட்டது"

என சாஸ்திரியார் வலியுறுத்துகிறார்.

மேற்சொன்ன கருத்துக்கள், 1902-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் தேதியன்று நடைபெற்ற மதுரைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் திரு. சாஸ்திரியார் நிகழ்த்திய சொற்பொழிவில் வெளியிடப் பெற்றவை.

எந்த மொழியினுடைய இலக்கியமும், பிறமொழிச் சொற்களையும், கருத்துக்களையும், முறைகளையும் **தேவைப் படும் அளவுக்கு** எடுத்துக் கொள்வதன் வாயிலாகத்தான் வளர்ச்சி பெறமுடியும் என்னும் உண்மையை சாஸ்திரியார் உணர்ந்திருந்ததோடு, நடைமுறையிலும் அதனைக் கடைப் பிடித்தார். ஆனால், தமிழ் மொழியின் தனித்தன்மை கெட்டுப் போகாமல் காப்பாற்ற வேண்டும் என்பதிலும் அவர் உறுதி கொண்டிருந்தார்.

> "நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கேற்பச் சொற் களும் ஏற்பட்டுப் பாஷைக்கும் நாகரிக நலம் விளைத் தல் வேண்டும். அவ்வாறு சொற்கள் ஏற்படுமிடத் துப் பிற பாஷைச் சொற்களன்றித் தன் சொற்

> களே மிகுதல் வேண்டும் என்பது உயர்த் தனித் தமிழ் மொழிக்கும் பொருந்துவனவாம்.''

என்று 'தமிழ்மொழி வரலாறு' என்னும் தமது நூலின்கண் கூறுகின்றார். அதில் பிறமொழிச் சொற்கள் வரம்பின்றி தமிழ்மொழியில் கலத்தல் கூடாதென்று எச்சரிக்கை செய்வதோடு, தமிழ் 'உயர்தனிச் செம்மொழி' என்ற உண்மையைக் காத்து வர, தன் சொற்களே மிகுதியும் கொண்டு அம்மொழி வாழவேண்டும், வளர வேண்டும் என்கிறார்.

எளிய நடையில் எழுதுக!

பரிதிமாற் கலைஞர், தூய தமிழில் எழுதவும் அவ்வாறே பேசவும் வல்லவராக இருந்தார். அவர் தூய தமிழில் பேசுவது கண்டு வியந்த அவருடைய நண்பர் ஒருவர், "தாங்கள் எப்போதும் இதே நடையில்தான் பேசுவது வழக்கமோ? வீட்டில்கூட இம்மாதிரியான தமிழில்தான் பேசுவதோ?'' என்று கேட்டார்.

அதற்குப் பரிதிமாற் கலைஞர் அளித்த பதில் :

> "அப்படியெல்லாம் பேச எனக்குப் பைத்திய மில்லை; ஆங்கிலம் படித்த தமிழ் அறிஞர்களுடைய தமிழறிவு தெளிவாயிருப்பதில்லை யென்றும் அவர்களுக்குச் செந்தமிழ் பேசக்கூட வராது என்றும் தனித் தமிழ்ப் புலவர்கள் கூறிப் பரிகசிப்பதுண்டு என்பதை நானறிவேன்; அதற்காகவே தான் பண்டிதர்களிடம் இம்மாதிரி நடையில் பெரும்பாலும் நான் பேசுவது. எளிய நடையிற் பேசுவதும் எழுதுவதுமே விரும்பத்தக்கது என்பதுதான் என் கொள்கை.''

'எளிய தமிழ்' என்பதனை, 'கொச்சைத் தமிழ்' என்ற பொருளில் சாஸ்திரியார் கூறவில்லை. இதற்கு,

> " சூரிய நாராயண சாஸ்திரியிடத்தில் சிறந்து விளங்கிய பண்புகள் பலவுண்டு. அவைகளுள் சிறந்தது, எங்கும் எப்போழுதும் எக்காரணம் பற்றியும் கொச்சைத் தமிழ் பேசாமை."

என்று திரு. வி. கலியாணசுந்தரனார் கூறியிருப்பதே சான்ருகும்.

'தனித்தமிழ்' தோன்றக் காரணம்

தமிழ் மொழியில் போதிய அன்பில்லாமையாலோ, அல்லது வடமொழியில் அதிக அளவில் பற்று வைத்திருந்ததாலோ, தமிழை வடமொழி மயமாக்கிவிட முயன்றனர் வைதிகர்கள்! அன்னார், மிகுதியும் சம்ஸ்கிருத சொற்களைப் பெய்தும், கிரந்த எழுத்துக்களைக் கலந்தும் எழுதிய கலப்படத்துக்கு 'மணிப்பிரவாளம்' என்றும் பெயர் வைத்தனர். இந்தப் 'புண்ணியவான்கள்'தான் 'தனித் தமிழ்'க் கிளர்ச்சி தோன்றக் காரணமாயினர். இதுபற்றிப் பரிதிமாற் கலைஞர் கூறுவதைப் பார்ப்போம்:

> "சைனர், ஆரியரது ஆச்சாரங்களுட் பலவற்றை மேற்கொண்டனர்...வடமொழியின் பாகதங்களையும் அவற்றினிலக்கணங்களையும் நன்குணர்ந்து கொண்டனர். இத்தகைய சைனப் புலவர்கள் தமிழ் மொழியையும் அப்பியசிக்கப் புகுந்து, தமிழின்கண்ணே அளவிறந்த வடசொற்களை யேற்றினர். அத்துணையோ டமையாது 'மணிப்பிரவாளம்' என்றதோர் புதிய பாஷையை வகுத்துவிட்டனர். அஃதாவது தென்மொழியும் வடமொழியும் சரிக்குச் சரி கலந்த பாஷையாம். மணியும் பவளமும் கலந்து கோத்ததோர் மாலை காட்சிக்கின்பம் பயத்தல் போலத் தமிழுஞ் சமஸ்கிருதமுங் கலந்த பாஷை கேள்விக் கின்பம் பயக்

கும் என்ற போலி எண்ணமே இத்தகைய ஆபாச பாஷையொன்று வகுக்குமாறு தூண்டிற்று. 'ஸ்ரீ புராணம்' என்னும் சைன நூல் முழுவதும் மணிப் பிரவாள மென்னும் இவ்வாபாச நடையின் இயன்றதாமாறு காண்க....மற்ருெரு புறத்தில் ஆரியப் புலவர் சிலர் தமிழ் மொழியை அப்பியசித் துக்கொண்டு, நீதி மார்க்கத்தையும் சமய சாஸ்தி ரங்களையும் தமிழர்க்குப் போதிப்பேமெனப் புகுந்து, தமது கருத்துக்களை யெல்லாம் மேற் கூறிய மணிப்பிரவாள பாஷையில் வெளிப்படுத் துரைப்பாராயினர்."

—என்று கூறுகிருர் சாஸ்திரியார். இவர், வடமொழியிடம் காழ்ப்பற்றவர். தேவைப்படுமிடத்து, வடமொழிச் சொற் கள் இலக்கண வரம்புகளுக்கு உட்பட்டு தம் தாய்மொழியில் கலப்பதை வரவேற்பவர் என்ருலும், தமிழின் தனித் தன்மையை அழிக்க முயன்ற கலப்படங்களின் நாச வேலையை அவர் வெறுத்தார். 'மணிப்பிரவாள' மொழியைத் தோற்றுவித்தோர், தமிழின்மீது கொண்ட பகைமையால் அப்படிச் செய்தார்கள் என்று சொல்வதற்கில்லை. அன்ஞ ரின் வைதிக மதப்பற்றே அதற்குக் காரணமாக இருக்க வேண்டும். காரணம் எதுவாயினும், தமிழருடைய நெஞ்சங் களிலே வடமொழி மீது வஞ்சம் வளருவதற்கும், 'தனித் தமிழ்'க் கிளர்ச்சி தோன்றுவதற்கும் 'மணிப்பிரவாள' மொழியே காரணமானதை மறைப்பதற்கில்லை.

இத்துடன் சூரியநாராயண சாஸ்திரியாரிட மிருந்து விடை பெற்றுக்கொண்டு, சுவாமி வேதாசலம் அவர்களை அணுகுவோம்.

மறைமலையடிகளாரின் வைதிகம்

பல்லாவரம் சுவாமி வேதாசலம் அவர்கள், தமிழ் மொழி யில் அளவற்ற புலமை பெற்றிருந்தார். சமஸ்கிருதம், ஆங்கி

லம் ஆகிய பிற மொழிகளிலும் அவருக்குப் போதிய ஞான மிருந்தது. ஆயினும், தமிழில் பிறமொழிச் சொற்கள்-குறிப் பாக, வடமொழிச் சொற்கள் கலக்கக்கூடா தென்பதில் அவர் 'வைதிகம்' காட்டி வந்தார். தாம் எழுதி வெளியிடும் நூல்களில் தம்மையும் அறியாமல் வடமொழிச் சொற்கள் கலந்துவிடினும், மறு பதிப்பில் அவற்றைக் களைந்தெறி வதைக் கடமையாகக்கொண் டிருந்தார். அப்பெரியார் தாம் எழுதிய 'சாகுந்தல நாடக மொழி பெயர்ப்பும், அதன் ஆராய்ச்சியும்' என்ற நூலின் இரண்டாம் பதிப்பின் முகவுரையில்,

> "தமிழுக்கு ஆக்கமாக எழுதப்படும் நூல் களில் வட சொற்களைக் கலந்து எழுதுதல் ஒரு பெருங் குறைபாடாகக் காணப்படுதலின் முதற் பதிப்பில் ஆங்காங்கு விரவிய சிற்சில வடசொற் களையுங் களைந்து அவற்றிற்கு ஒத்த தூய தமிழ் சொற்களையே பெய்து இதனை அமைத்திருக்கின் றேன்."

என்று கூறுகின்றார். இதனால் வட சொற்களின் தேவையின் றியே தமிழ் மொழி வாழ முடியும், வளர முடியும் என்பதில் அவருக்கிருந்த நம்பிக்கை புலப்படும். ஆனால், பெரும் புலமை பெற்ற அவர்கூட வட மொழிச் சொற்களை முதலில் பெய்வதும் பிறகு களைவதுமாகப் 'போராடி'க் கொண்டிருந் தார் என்பதை மறப்பதற்கில்லை.

பரிதிமாற் கலைஞரின் வாரிசு

எழுதுவதில் மட்டுமின்றி, நேருக்கு நேர் உரையாடுவதி லும் பிறமொழிச் சொற்கள் கலக்கக் கூடாதென்பது அவர் கொள்கை. இந்தக் கொள்கையை நாம் அப்படியே ஏற் பதற்கில்லை என்றாலும், தமிழ் மொழியின் வாழ்விலும், வளர்ச்சியிலும் அவருக்கிருந்த ஆர்வத்தை நாம் பாராட்டு கிறோம். அது காரணமாகவே, பிறமொழிச் சொற்கள் தமி

ழில் கலக்கக்கூடாதென்பதை அவர் மேற்கொண்டார் என்பதில் நமக்கு ஐயமில்லை.

ஏன்? சுவாமி வேதாசலம் எனத் தமக்குப் பெற்றோரிட்ட வட மொழிப் பெயரை 'மறைமலை அடிகள்' எனத் தமிழில் மாற்றிக் கொண்டதற்கும் அவருக்கிருந்த தாய்மொழிப்பற்று தான் காரணம். இந்தப் பெயர் மாற்றத்திற்கு சுவாமி வேதாசலம் அவர்களுக்கு வழிகாட்டிய பெருமை திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாருக்கே உரிமை.

மற்று, வடமொழியின் தாக்குதலி லிருந்து தமிழைக் காக்கும் பணியிலும் மறைமலையடிகளார்க்கு முன்னோடியாக விளங்கினர் பரிதிமாற் கலைஞர். சாதி உணர்ச்சி வெறிக்கு அடிமைப்படாத எவரும் இந்தச் சரித்திர உண்மையை மறைக்கவோ, மறுக்கவோ இயலாது.

"பெரும்பாலும் அந்தணர்களுக்குத் தமிழ்ப்பற்றில்லை' என்பது அடிகள் கருத்து. ஆனால், இந்தச் 'சூரியநாராயண ருக்கு மட்டும் ஏன் இவ்வளவு தமிழ்ப்பற்று! நான், 'தனித் தமிழ்' இயக்கங் காண்பதற்கு முன்பே அவர் தனித்தமிழ் உணர்ச்சி கொண்டு தன் வடமொழிப் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக் கொண்டாரே!' என்று பரிதிமாற் கலைஞரைப் பற்றித் தம் வாழ்நாள் முழுவதும் அடிகள் பாராட் டிக் கொண்டிருந்தார்" என்று, "மறைமலையடிகள் வரலாறு" என்ற நூலில், திரு. மறை - திருநாவுக்கரசு குறிப்பிட்டுள் ளார்.

சமஸ்கிருத பக்தர்கள், தமிழும் வட மொழியும் கலந்த *மணிப்பிரவாள* மொழி யொன்றைத் தோற்றுவித்தார்கள் என்பதையும் அதற்கு "ஆபாச மொழி" எனப் பெயரிட்டு பரிதிமாற் கலைஞர் தம் வெறுப்பை வெளிப்படுத்தினர் என்பதையும் முன்னரே குறிப்பிட்டிருந்தோம். மறைமலையடி களார் தமது வாழ்க்கையின் பிற்காலத்தில் வடமொழிச் சொற்களை விலக்கி வந்ததற்குக் காரணமும் மணிப்பிரவாள மொழியின்பால் அவருக் கேற்பட்ட வெறுப்புதான்.

களையெடுக்கும் திருப்பணி

வடமொழியிலுள்ள காப்பியங்களும், கதைகளும் தமிழில் புகுந்ததோடு, அம்மொழியின் சொற்களும், எழுத்துக்களும்கூட திருந்தியும் திருந்தாமலும் தமிழில் நுழைந்தன. இந்த நிலையை நீடிக்க விட்டால் தமிழின் தனித்தன்மை அழிந்து விடுமோ என அஞ்சினார் மறைமலையடிகள். அது காரணமாகவே, பிற்காலத்தில் தூய தமிழில் பேசுவதிலும்—எழுதுவதிலும் பிடிவாதம் காட்டி வந்தார். அவர் காலத்துக்கு அது சரிதான். அவர் பெரும் புலமை பெற்றவராதலால் வடமொழிச் சொற்கள் கலவாமல் தூய தமிழில் பேசவும் எழுதவும் அவரால் முடிந்தது. ஒன்றிருவர் அப்படி இருப்பதிலே தவறில்லை. ஆனால், எல்லோராலும் முடியுமா? முடிவதானாலும், தமிழ் வளருமா?

மற்று, இந்நாளில் மணிப்பிரவாளமொழி இருக்குமிடம் தெரியவில்லை; மறைந்து மாண்டுபோய்விட்டது.

டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் சங்க இலக்கியங்களைப் பதிப்பித்துக்கொடுத்த பணி காரணமாக, தமிழ் மொழியைப் பற்றியும், தமிழர் இனத்தைப்பற்றியும் மறைந்து கிடந்த சரித்திர உண்மைகள் எல்லாம் வெளிப்பட்டுவிட்டன. சங்ககாலத் தமிழிலும் வடமொழிச் சொற்கள் கலந்திருக்கின்றன என்ற உண்மையும் சேர்ந்து வெளிப்பட்டுவிட்டது.

இந்த நிலையில், 'தனித் தமிழ்'க் கிளர்ச்சி தேவையா? *சாதாரணக் கல்வி அறிவுள்ளவர்களும் தமிழில் நூல் எழுதும் அளவுக்கு விஷய ஞானம் வளர்ந்துள்ள இந்த நாளில் தனித் தமிழில் எழுத வேண்டுமென்ற கிளர்ச்சி அந்த வளர்ச்சிக்குத் தடைபோடுவதாகாதா?*

திரு. வி. க. வின் திருவுள்ளம்

மறைமலை அடிகளாரின் 'தூய தமிழ்'க் கொள்கையை அவர் காலத்தில் வாழ்ந்த திரு. வி. க. அவர்களே ஏற்றுக் கொள்ளவில்லை. இதோ சான்று:

"*விசுவாமித்திரன்* மன்னனா யிருந்தபோது காமதேனுவைத் தன் வயப்படுத்த இயலாது, சினந்து, அதையுடைய தனது குருவாகிய வசிஷ்டரோடு போர்புரிந்து தோல்வியுற்றனன். அவன் விடுத்த அம்புகள் வசிஷ்ட முனிவரை என்ன செய்தன? அவைகளைத் தடுக்க முனிவர் ஏதாயினும் முயற்சி செய்தனரோ?

"முனிவர் ***ஆத்ம சக்தி***யின் முன்னே மன்னன் ***மூர்க்க சக்தி*** என்ன செய்தது? வேந்தன், அறவோர் ***ஆத்ம சக்தி***க்கு முன்னே தனது ***மூர்க்க சக்தி*** இரும்புண்ட நீர் போலாயது கண்டு, தானும் ***ஆத்ம சக்தி***யை வளர்க்க முயன்று முனிவனாயினான்."

—'மனித வாழ்க்கையும், காந்தியடிகளும்' என்ற தமது நூலில் 'சத்யாக்கிரககிகள்' என்ற தலைப்பின் கீழ் மேற்கண்ட வரிகளை எழுதியுள்ளார் திரு வி. க. அதிலுள்ள வடமொழிச் சொற்களைத் தடித்த எழுத்துக்களில் தந்திருக்கிறோம். அதில் **ஷ்** என்ற கிரந்த எழுத்தைப் பயன்டுத்தி வசிஷ்டர் என்றே எழுதியிருக்கிறார், ஷ் என்பதற்கு பதிலாக **ட்** என்ற தமிழ் எழுத்தைப் பயன்படுத்தி வசிட்டர் என எழுதியிருக்கலாம். அப்படி எழுதுவது பிழை என்பதை திரு. வி. க. உணர்ந்திருந்தார் என்பதை மறுப்பாருண்டோ?

இந்த இடத்தில் மறைமலை அடிகளாரும் திரு. வி. க. வும் வேறுபடுவதைப் பார்க்கிறோம். இதனால், திரு. வி. க. தமிழ்ப் பற்று அற்றவர் என்று எவரேனும் கூறமுடியுமா? தேவைப்படும் இடத்து, பொருட் செறிவு கருதிப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தலாம் என்பது திரு. வி. க. வின் கொள்கை. தாம் எந்த நடையில் எழுதினாரோ, அதே நடையில் ஏழை எளியவரோடும் பேசிப்பழகினார் திரு. வி. க. பஞ்சாலைத் தொழிலாளர் கூட்டங்களிலும் தாம் எழுதும்

பாணியிலேயே பேசினூர் சாது முதலியார். அதனுல் உழைப் பாளி மக்களுடைய இதயங்களிலும் அவருடைய எழுத்தும் பேச்சும் இடம்பெற முடிந்ததைக் கண்டோம்.

மறைமலை அடிகள், மொழித் துறையில் வைதிகம் காட் டாமல் சிறிது வளைந்துகொடுத்து திரு. வி. க. வின் நிலைக் கேனும் இறங்கியிருப்பாரானுல், அவருடைய தமிழ்த் தொண்டு பாமர மக்களுக்கும் பயன் தருவதாக இருந்திருக் கும். இப்படிச் சொல்வது மறைமலை அடிகளாரின் தமிழ்த் தொண்டை குறைத்துப்பேசுவதாகாது.

' தனித்தமிழ்ப் பாதை 'யில் சுந்தரனூர்

வடமொழியை வெறுத்து, அந்த வெறுப்பையே எரு வாக்கி, தமிழை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள், 'மனோன்மணீயம்' பி. சுந்தரம் பிள்ளை எம். ஏ., எப். யூ. எம். எப். ஆர். எச். எஸ்., எம். ஆர். ஏ. எஸ். அவர்களைத் தங்கள் குருவாகக் கொள்கின்றனர்.

இவர், திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரின் நண்பர். வடமொழியின் தொடர்பின்றியே தனித்தியங்கும் ஆற்றல் தமிழ்மொழிக்கு உண்டு என்ற கொள்கை யுடையவர்.

இளங்கோ அடிகளுக்குப் பிறகு தமிழில் தனி நாடக நூல் ஒன்றை இயற்றித்தந்த பெருமை இவரையே சாரும். 'மனோன்மணீயம்' என்பது, இவர் இயற்றிய நாடக நூலின் பெயர். மற்றும் 'பத்துப் பாட்டு', 'ஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி', 'திருநாவுக்கரசர் கால ஆராய்ச்சி' போன்ற கட்டுரைத் தொகுப்பு நூல்களும் இவர் பெயரால் வெளிவந் துள்ளன. இப்பெரியார் வாழ்ந்த காலம் 1855-1897 ஆகும். ஆம்; நாற்பத்திரண்டு ஆண்டுகளே இந் நிலவுலகில் வாழ்ந் தார்; ஆயினும் தமிழுக்கு இவர் ஆற்றியுள்ள பெருந்தொண் டினை நன்றியுள்ள தமிழர் யாரும் பாராட்டாமலிருக்க முடியாது.

‘தமிழ் மொழியே, நீயே தாய் !’

ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, திருவிதாங்கூர் அரசரின் குடிமகனாக வாழ்ந்தவர். திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் அறிவு நூற் புலவராகத் தொழில் புரிந்தவர். கேரள ஆட்சியில் வாழ்ந்து, அரசர் பெருமானின் கீழ் சேவகம் புரிந்துவந்தவர் என்றாலும், தமிழகமே தம் தாயகம், தமிழே தம் தாய் மொழி—என்ற நினைப்பை மறவாதவர். ‘மனோன்மணீயம்’ நாடகத்தில் தமிழ்த் தெய்வத்துக்கு வணக்கம் பாடிய ஆசிரியர்,

> ....நீபெறும் புதல்வரில்
> அடியேன் கடையேன் அறியாச் சிறியேன்
> கொடு மலையாளக் குடியிருப் புடையேன்
> ஆயினும் நீயே தாயெனும் தன்மையன்

என்று கூறுமிடத்தில், ‘கொடு மலையாளக் குடியிருப்புடையேன்’ என்ற வாசகம், தாயகத்தை-தமிழகத்தைத் துறந்து மலையாள நாட்டில் வாழ்வதில் அவருக்கிருந்த வேதனையை விளக்கும். ‘ஆயினும் நீயே தாய் எனுந் தன்மையன்’ என்று பாடியதால், குடியிருப்பது கேரள நாடு ஆயினும் தன் நெஞ்சில் இருப்பது, தான் வாழ்த்தி வணங்குவது தமிழகம்தான் எனக் கூறுகின்றார்.

ஆசிரியர் சுந்தரனார், தமது மனோன்மணீயம் நாடகத்தின் வாயிலாகத் தெற்கெல்லைக் கிளர்ச்சிக்கு வித்தூன்றிப் போனார். திருவிதாங்கூர் இராஜ்ஜியத்தின் தென் கோடியில் உள்ள ‘நாஞ்சில் நாடு’ என வழங்கும் ‘நன்செய் நாடு’ தமிழகத்தின் ஒரு பகுதி என்பதையும், அது தமிழரால் மீட்கப்பட வேண்டிய நிலப்பரப்பு என்பதையும் நினைவூட்டினார்.

> “ வஞ்சி நாடதனில்
> **நன்செய்** நாடெனச்
> செந்தமிழ் வழங்கும்
> தேயமொன் றுளது...

என்று கூறும் ஆசிரியர், அந்த நிலப்பரப்பை மலையாள மொழி பேசும் மன்னன் ஆளுகின்றான் என்பதையும் கவனத்தில் கொண்டு,

" சின்னா ளாகச்
சேரன்ஆண் டிடினும்
இன்னாள் வரையும்
அந்நாட் டுரிமை
கொடுத்தது மில்லை
நாம்விடுத் ததுமில்லை "

என்று கூறுகின்றார். 'குடிலன்' என்ற பாத்திரத்தின் வாயிலாக இந்தக் கருத்தை வெளியிட்டிருப்பினும் ஆசிரியரின் கொள்கையும் அதுவே எனத் துணியலாம். பிற்காலத்தில் நான் தெற்கெல்லைக் கிளர்ச்சியைத் துவக்குவதற்கு எனக்கு ஆர்வமூட்டிய வரிகள் இவை. அதனால், மனோன் மணீயம் சுந்தரனாருக்கு என் மனத்தில் எப்போதுமே ஒரு தனியான இடம் உண்டு.

பரம்பொருளும் பழந்தமிழும்

ஆனால், மொழித் துறையில் அவர் கொண்டிருந்த 'வைதிக'க் கொள்கையை நாம் அப்படியே ஏற்றுப் பின்பற்றுவதற்கான நியாயமோ, சூழ்நிலையோ இன்று இல்லை என்பதைச் சொல்லத்தான் வேண்டும்.

'மனோன்மணீயம்' நாடகத்தில் வரும் 'தமிழ்த் தெய்வ வணக்கத்தி'ல்,

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமும் துளுவும்
உன்உதிரத்து உதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்

ஆரியம்போல் உலக வழக்கு
அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே

என்று பாடுகின்றார். இப்பாடலில், தமிழுக்குத் தெய்வத் தன்மை கற்பிப்பதோடு, இறைவனைப் போன்று தமிழ்மொழி என்றும் இருக்கும் திறம் படைத்தது என்று கூறி மகிழ்கின்றார். இறுதி வரிகளில், 'வடமொழி, பேச்சு வழக்கற்று உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதைந்து போய்விட்டது' என்று கூறுவதால், வடமொழியின்பால் அவரது பற்றின்மை தெற்றென விளங்கும்.

ஏட்டிக்குப் போட்டி!

ஆசிரியர் சுந்தரம் பிள்ளை காலத்தில்தான், தமிழுக்கு இன்னல் விளைவிக்கும் 'மணிப்பிரவாள' மொழியை வழக்கில்கொண்டு வந்தனர் வடமொழிப் பற்றுடையோர். மற்று, கலைமகளின் **வலது** கண் போன்றது வடமொழி என்றும், **இடது** கண் போன்றது தமிழ்மொழி என்றும் அன்னார் வழக்காடினராம். வடமொழியின் கிளை மொழியே தமிழ் மொழி என்றும் சாதித்தனராம். இது பொறுக்கவில்லை சுந்தரனாருக்கு,

சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ அனாதிஎன மொழிகுவதும் வியப்பாமே

வீறுடைய கலைமகட்கு விழியிரண்டு மொழியானல்
கூறுவடமொழி·வலமாக் கொள்வர் குணதிசை யறியார்

என்றெல்லாம் பாடி, தமிழ்மொழியானது சமஸ்கிருத மொழிக்கு முன்தோன்றிய தென்றும், கலைமகளின் வலது கண்ணாக விளங்குவது என்றும் வழக்காடுகின்றார் சுந்தரனார்.

சிறப்பில் வடமொழிக்கும் தென்மொழிக்குமுள்ள வேற்றுமை பற்றி ஆசிரியர் சுந்தரனாரின் கருத்து ஒருபுறமிருக்கட்டும்; 'ஏட்டிக்குப் போட்டி' என்பது போல, வடமொழியாள

ரில் சிலர் பேசிய வம்புகளுக்கு ஆசிரியர் சுந்தரனாரின் வாதம் பதிலடியாக இருக்கலாம். ஆனால், அவரால்கூடத் தம் உரைநடையில் வடமொழிச் சொற்களை முற்றிலும் விலக்கி வைக்க முடியவில்லை. பிறமொழிச் சொற்கள் தமிழில் கலப்பதை ஆதரிப்போரையும் மிஞ்சிவிடக்கூடிய வகையில் 'கலப்படம்' செய்திருக்கிறார் சுந்தரனார். சான்று வேண்டுமானால், அவர் இயற்றிய 'மனோன்மணீயம்' நாடகப் பாத்திரங்களின் பெயர்களைப் படியுங்கள் :

ஜீவக வழுதி, சுந்தர முனிவர், நிஷ்டாபரர், கருணாகரர், நடராஜன், நாராயணன், பலதேவன், சகடன் புருடோத்தம வர்மன், அருள் வரதன், மனோன்மணி, வாணி, குடிலன், முருகன்.

இவற்றில் கடைசியாக உள்ள இரண்டும் தமிழ்ப் பெயர்கள். மற்றவையெல்லாம் திருந்தியும் திருந்தாமலும் அமைந்துள்ள வடமொழிப் பெயர்களே. ஏன் ? நாடகத்தின் பெயரிலேயே வடமொழி 'வாடை' வீசுகிறது! ஆசிரியர் ஒருகணம் சிந்தித்திருப்பினும் தூய தமிழ்ச் சொற்களால் பாத்திரங்களின் பெயரை அமைத்திருக்க முடியுமே !

இதுவா, 'தமிழ்'!

இனி, ஆசிரியர் சுந்தரனாரின் உரைநடையை ஆராய்வோம் :

> "...***வித்துவ சிரோமணி***களுடைய நன்முயற்சிக்கு ஈடுகூறத்தக்கது யாது? தம் மக்கட்கு எய்ப்பில் வைப்பாக இலக்கற்ற ***திரவியங்களை பூர்விகர்கள்*** வருந்திச் ***சம்பாதித்து*** வைத்திருக்க, அம் மக்கள் அவையிருக்குமிடந்தேடி, எடுத்***தனுபவியாது*** இரந்துண்ணும் ஏழைமை போலன்றே ஆகும், ஈடுமெடுப்பு மற்ற நுண்ணிய ***மதியும் புண்ணிய சரிதமும்*** உடைய முன்னோர், ஆயிரக்

கணக்கான ஆண்டு உழைத்து ஏற்படுத்தியிருக்கும் அரிய பெரிய நூல்களை நாம் ஆராய்ந்து அறிந்து **அனுபவியாது** வாளா னொந்து காலம் போக்கல்! ஆதலால் முற்கூறிய **உத்தம வித்துவான்களைப்** பின்தொடர்ந்து நம் முன்னோர் ஈட்டிய **பொக்கிஷங்களைச். சோதனை** செய்து தமிழராகப் பிறந்த யார்க்கும் உரிய **பூர்வார்ஜித்த** கல்விப் பொருளை **க்ஷேமப் படுத்தி அனுபவிக்க** முயல்வது **முக்கிய**மான முதற் கடமையாம்.''

இது, '**மனோன்மணீயம்**' நாடகத்திற்கு ஆசிரியர் எழுதியுள்ள முகவுரையில் ஒரு பகுதியாகும். இதிலுள்ள வடமொழி சொற்களை யெல்லாம் தடித்த எழுத்துக்களில் பிரித்துக் காட்டியிருக்கிறோம். போதிய புலமையற்ற எழுத்தாளர் கூட விலக்கி யிருக்கக் கூடிய வடமொழிச் சொற்களைத் தமது உரைநடையில் சேர்த்து வைத்திருக்கிறார் சுந்தரனார். ஆம்; என்னதான் தனித் தமிழ்க் கொள்கை உடையவராயினும் காலத்தின் வலிமையை வெல்ல அவராலும் முடியவில்லை.

மற்று, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், 'மனோன்மணீயம்' சுந்தரனார் ஆகிய இருவரும், தமிழ் தனித்தியங்கும் உயர்தனிச் செம்மொழி என்ற உண்மையை வலியுறுத்தியதன்றி, தமிழில் பிறமொழிச் சொற்கள் தேவையை முன்னிட்டும் கலக்கக்கூடாதென்று கூறினாரிலர்.

ஆங்கில மோகம் ஏன்?

தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பிறமொழிச் சொற்கள் தேவையில்லையென்றே, தேவைப்படுமிடத்தும் பிறமொழிச் சொற்கள் தமிழில் கலக்கக்கூடா தென்றே கூறப்படுவதை நாம் ஆதரிக்கவில்லை என்றாலும், அப்படிக் கூறுவதற்குத் தமிழ் மொழியின்பால் வைத்த பற்றுதான் காரண மென்றால், நாம் அதனைப் புரிந்துகொள்ள முடியும்.

அதற்குமாறாக,'தனித்தமிழரி'ல் சிலர் வடமொழியைமட்டுமே வெறுக்கின்றனர். அம்மொழிச் சொற்கள் தேவையை முன்னிட்டுக் கூட தமிழில் கலக்கக் கூடாதென்று வழக்காடுகின்றனர். ஆனால் ஆங்கில மொழியை வரவேற்க அவர்கள் அஞ்சுகின்றார்கள் இல்லை. தமிழுக்குரிய இடங்களை ஆங்கில மொழிக்கு அளிக்கவும் அவர்கள் தயங்குவதில்லை. ஆங்கில எழுத்துக்களை அவற்றிற்குரிய வரி வடிவங்களோடு தமிழில் கலப்பதற்கும் அன்னார் வெட்கப்படுவதில்லை. இது தமிழ்ப்பற்று ஆகுமா? ***தேவையை முன்னிட்டு பிறமொழிச்***

சொற்கள் தமிழில் கலக்கலாம் என்று நாம் கூறினாலும், வரம்புமீறி, தமிழின் தனித் தன்மையைக் கெடுக்கும் வகையில் கலப்பதை நாம்விரும்பவில்லை. அவ்வகையில் வடமொழியும் ஆங்கிலமும் நமக்கு ஒன்றுதான். இந்த இரண்டில் எந்த ஒருமொழியும் தமிழைக் கெடுப்பதற்கு அனுமதிக்க நாம் தயாராக இல்லை.

நம்முடைய தமிழ்ப் பற்றைக்கூட சந்தேகிக்கும் தனித் தமிழ்க் கட்சியார் தமிழின் மீது கொண்டுள்ள பற்றுதலைவிட வடமொழியின்பால் தங்களுக்குள்ள பகைமையையே அதிகமாக வெளிப்படுத்துகின்றனர். திரும்பவும் சொல்லுகிறோம்: *பிறமொழிப் பகைமை என்னும் நஞ்சை எருவாக்கி தமிழ்ப் பயிரை வளர்க்க முயன்றால், அது வளராது.*

ஆல் இண்டியா ரேடியோவுக்கு ஆதரவேன்?

அகில இந்திய ஒலிபரப்பு நிலையம், "ஆல் இண்டியா ரேடியோ" என்ற ஆங்கிலப் பெயரால் அழைக்கப்பட்ட போது, அதனை எந்தப் புலவரும் தலைவரும் எதிர்க்கவில்லை. ஆங்கிலத்திற்குப் பதிலாக 'ஆகாசவாணி' என்றவடமொழித் தொடர்புடைய கன்னடப் பெயர் தோன்றியபோதுதான் புலவர்களிலே சிலர் போர்க்கோலம் கொண்டு விட்டனர். இது, தமிழ்ப்பற்று?

ஆகாசவாணி வந்த பிறகுதான் வானொலி என்னும் தமிழ்ச் சொல்லுக்கும் வாழ்வு கிடைத்தது. 'ஆல் இண்டியா ரேடியோ' வோடு ஒட்டுக் குடித்தனம் செய்யக்கூட வானொலிக்கு வாய்ப்புத் தரவில்லை அன்றிருந்த பரங்கியர் ஆட்சி. அந்த அநீதியைப் புலவர்கள் அனுமதிக்கக் காரணம் யாது? ஆங்கில மோகம்தானே!

மறைமலையடிகளார், வடமொழிச் சொற்களை முற்றிலும் விலக்கிவைத்தெழுதுவதில் வல்லுநராக இருந்தது உண்மை. அவர் எழுதிய வெல்லாம் இலக்கிய நூல்கள்-புலவர்கள் மட்டுமே படித்துப் பயனடையத் தக்க எழுத்தோவியங்கள்.

அதனால், தனித் தமிழில் எழுதுவதினுடைய விளைவுகள் அவரைத் தாக்கவில்லை. ஆனால், அவர்கூட ஆங்கில மொழியிடம் தனிப்பட்ட பாசமுடையவராக இருந்ததைப் பார்க்கிறோம்.

தமிழில் 'மறைமலை', ஆங்கிலத்தில் வேதாசலமா ?

'சுவாமி வேதாசலம்' என்ற வடமொழிப் பெயரை 'மறைமலையடிகள்' என்று தமிழில் மாற்றிக்கொண்ட அப் பெரியார், ஆங்கிலத்தில் எழுதும்போது மட்டும், 'வேதாசலம்' என்ற வடமொழிப் பெயரையே தம் வாழ்நாள் முழுதும் பயன்படுத்தி வந்திருக்கிறார்! ஐயமிருப்பின் 'தமிழர் மதம்' என்ற பெயரில் அவர் இயற்றி வெளியிட்டுள்ள நூலைப்பாருங்கள். முகப்புப் பக்கத்தில் ஊர்ப் பெயரும் ஆசிரியர் பெயரும் அச்சுக்கூடப் பெயரும் தமிழிலும் ஆங்கிலத்திலும் தரப்பட்டுள்ளன. ஆம்; தேவைப்படாத இடத்திலும் ஆங்கிலம் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது.

அந் நூலுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் தனித் தனியே முன்னுரை எழுதியுள்ளார் அடிகளார். அவற்றில், ஆங்கில முன்னுரையின் இறுதியில் 'வேதாசலம்' என்றும், தமிழ் முன்னுரையின் இறுதியில் 'மறைமலையடிகள்' என்றும் கையொப்பம் இட்டுள்ளார்: ஏனோ இந்த இரட்டைப் பெயர்! ஆங்கிலத்திலும் மறைமலையடிகள் என்றே கையொப்பம் இட்டிருந்தால் அவருடைய தமிழ்ப்பற்று மேலும் பெருமை பெற்றிருக்கு மல்லவா ?

அடிமைப் புத்தி !

சென்னை நகராண்மைக் கழகம், 'ஸ்ரீ'க்குப் பதிலாக 'திரு'வையும், 'ஸ்ரீமதி'க்கு மாற்றாக 'திருமதி'யையும் பயன் படுத்துவது எனத் தீர்மானித்திருக்கிறது. இந்த மாறுதலைக் கொண்டு வந்தவர்களின் உள்நோக்கு எதுவாயினும் 'திரு'வை நாம் வரவேற்கிறோம். ஆனால், வடமொழி 'ஸ்ரீ'யையும்

'ஸ்ரீமதி'யையும் வெறுத்தவர்கள், மேயர், கார்ப்பொரேஷன், என்ற ஆங்கிலப் பெயர்களை வெறுத்து விலக்காததேனோ?

இது ஆங்கில மொழியின்பால் உள்ள மோகத்தையன்றி வேறெதைக் காட்டுகின்றதோ! 'மோகம்' என்று மட்டும் சொன்னால் போதாது. 'அடிமைப் புத்தி' என்று சொல்லு வதே பொருத்தம்.

திரைப்படத் தொழில் துறையில் உள்ள தனித் தமிழ்க் கட்சியினர், 'பிக்சர்ஸ்', 'புரொடக்ஷன்ஸ்', 'பிலிம்ஸ்' என்ற பெயர்களை யெல்லாம் பயன்படுத்துகின்றார்கள். இந்த ஆங் கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பயன் படுத்தியிருக்கலாமே! அது, 'பண' விஷயமோ!

புலவர் குழுவின் ஆங்கில மோகம்

'தமிழகப் புலவர் குழு' என்ற பெயரில் ஓர் அமைப்புத் தோன்றியிருக்கிறது! அந்தக் குழுவின் மதுரைக் கூட்டத் திற்கு வருமாறு கலைஞர் டி. கே. சண்முகத்திற்குக் கிடைத்த அழைப்பைக் கண்ணுற்றேன். அதில் உள்ள குறைபாடு களை நல்லெண்ணத்துடன் இங்கு எடுத்துக் காட்டினால், புலவர்கள் என் மீது ஆத்திரப்பட்டு 'அறம்'பாட மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

என் கைக்குக் கிடைத்த 'தமிழகப் புலவர் குழு'க் கூட்ட அழைப்பிதழில், அக்குழுவில் அங்கம் வகிக்கும் புல வர் நாற்பத்தொன்பதின்மரின் பெயர்கள் தமிழில் பிரசுரிக் கப் பெற்றுள்ளன. அவர்களில் சிலருடைய பெயர்களுக்கு முன்னே உள்ள தலைப்பு எழுத்துக்கள்—T. P., M. P., K. M. என்ற ஆங்கில எழுத்துக்களில் அவற்றிற்குரிய வரிவடி வங்களோடு தரப்பட்டுள்ளன.

மற்றும், அந்த நாற்பத்தொன்பதின்மரில் இருபத் திரண்டு புலவர்களுடைய பெயர்களின் இறுதியில்—M. A. B. L., B. A. B. L., M. A. Ph. D., M. A., M. O. L., M. A., M. Litt... என்பன போன்ற ஆங்கிலப் பட்டங்

களை, ஆங்கில எழுத்துக்களிலே, அவற்றிற்குரிய வரிவடிவங்களோடு பிரசுரித்திருக்கிறுர்கள். ஆங்கில எழுத்துக்களோடு கூடிய அப்பட்டியலைக் கண்களால் பார்க்கும் போது தமிழ் அன்னையின் அழகுத் திருமேனி அம்மைத் 'தழும்புகளா'ல் புண்பட்டுள்ளது போன்று இருக்கின்றது. அந்த ஆங்கிலப் பட்டங்களைக் குறிக்கும் எழுத்துக்களைத் தமிழ் வரிவடிவத்திலேனும் தந்திருக்கக் கூடாதா? தமிழ்ப் புலவர் குழுவினர் நிலை இதுவானுல், மற்றவர்களைப் பற்றிக் கேட்பானேன்?

நாட்டுப் பற்றும் வேண்டும்

இந்த நிலையில், மதுரையில் கூடிய புல்வர் குழு, 'பிறமொழி எழுத்துக்கள் தமிழில் கலக்கக்கூடாது' என, ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது. மதுரையில் கூடியவர்களின் கண்ணேட்டத்தில் ஆங்கிலம் வேற்று மொழியாகப் படவில்லை போலும்! இங்குதான், "புலவர்களுக்கு மொழிப்பற்று இருந்தால்மட்டும் போதாது; நாட்டுப்பற்றும் வேண்டும்" என்று கூறவேண்டி யிருக்கிறது. 'அது அவர்களுக்கு நிரம்ப இருக்கிறது' என்று நான் நம்புகின்றேன். அதனைச் செயலிலும் காட்ட வேண்டுமல்லவா?

'வித்துவான்' என்ற வடமொழிப் பட்டத்திற்குப் பதிலாக 'புலவர்' என்று தமிழில் தரவேண்டும் எனக் கிளர்ச்சி எழுந்தது. அதனை நாம் புரிந்துகொள்கிறேம். ஆனல், B.O. L., M. O. L., P. O. L., M. Litt. எனத் தமிழ் மொழிப் புலமைக்குத் தரும் ஆங்கிலப் பட்டங்களை அவற்றிற்குரிய பொருட்களைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களாலேயே தரவேண்டும் என்று புலவர் குழுவினர் கேட்க வேண்டுமல்லவா? இதுவரை எந்தப் புலவரும் அப்படிக் கேட்டதாகத் தெரியவில்லையே!

'திராவிடரி'டம் அச்சமோ!

சென்னை நகராண்மைக் கழகம் 'ஸ்ரீ'க்குப் பதில் 'திரு' வைப் பயன்படுத்துவதெனச் செய்த முடிவை மட்டும் மதுரையில் கூடிய புலவர் குழுவினர் வரவேற்றுள்ளனர். அதே நகராண்மைக் கழகம் 'ஸ்ரீமதி'க்குப் பதிலாக 'திரு மதி'யைப் பயன்படுத்துவதெனச் செய்துள்ள முடிவு பற்றி மதுரைக் கூட்டம் மௌனம் சாதிக்கிறது. காரணம், 'திருமதி'யி லுள்ள 'மதி' வட மொழிச் சொல்லாக இருப்பது தான். அதனை வெளிப்படையாகச் சொல்லி 'திருவாட்டி' யைச் சிபாரிசு செய்திருக்கலாமே! 'திராவிடர்' களுக்கு அறிவுரை கூற அச்சம் போலும்!

தமிழகப் புலவர்களிடம் குறை காண்பதில் நமக்கு மகிழ்ச்சியில்லை. தமிழைப் போற்றும் உள்ளம் படைத்த எவரும் தமிழ்ப் புலவர்களையும் போற்றுவார்கள்-போற்றவும் வேண்டும். அந்த உள்ளம் நமக்கு முண்டு. ஆனல், தமிழின் மீது ஆதிக்கஞ் செலுத்த ஆங்கில மொழிக்கு மட்டும் அனுமதி வழங்கும் அடிமை யுள்ளத்தையும் சேர்த் துப் போற்ற நம்மால் முடியவில்லை.

வ. உ. சிதம்பரனார், திரு. வி. கலியாணசுந்தரனார், வ. வே. சு. ஐயர் போன்ற பெரியவர்களெல்லாம் தமிழில் நல்ல புலமை பெற்றிருந்தனர் என்பதை மறுப்பாரில்லை. அன்னார் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தையும் முற்றிலும் வெறுத்தனர். ஆம்; அவர்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவர்களாதலால், ஆங்கில மொழியிட மிருந்தும் தமி ழைக் காக்க முயன்ருர்கள்.

கலப்படம்! கலப்படம்! கலப்படம்!

தமிழ்மொழி தனித்தியங்கும் தன்மையுடையது; சமஸ்கிருதத்தின் கிளை மொழியன்று. சமஸ்கிருதம், வேறு பல மொழிகளின் தாயாக விளங்குகின்றது. அதுபோல, தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகளின் தாய் எனத் திகழ்கின்றது தமிழ். இந்த உண்மையை மொழிப் புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும் ஒரு மனதுடன் ஏற்கின்றனர். இதனை மறுப்பாரும் இருக்கலாம். ஆனல், அவரை மதிப்பார் இலர்.

வடமொழியிலும் தமிழ்

தமிழ்மொழி தனித்தியங்கும் தன்மை யுடையது என்பதனுலேயே பிறமொழிச் சொற்களின் கலப்புத் தேவையில்லை என்று கூறுவதற்கில்லை. உலகில் தனித்தியங்கும் சிறப்புடைய எத்துணையோ மொழிகள் பிற மொழிச் சொற்களை ஏற்றுக்கொண் டிருக்கின்றன. வட மொழி எனப்படும் சமஸ்கிருதம்கூட இதற்கு விலக்கன்று.

"தென்னாட்டு வடமொழியாளர் மட்டில் சில ஊர்ப் பெயர்,மலைப் பெயர், யாற்றுப் பெயர் முதலாயின வற்றைத் தங்கள் சப்த சாஸ்திரத்திற்கேற்ப ஓசை வேறுபாடு செய்துகொண்டு தாங்கள் வகுக்கப் புகுந்த புராணாதிகளில் வழங்குவாராயினர்"

என்று சமஸ்கிருதத்திலும் தமிழிலும் மிகுந்த புலமையுடைய திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் 'தமிழ் மொழி யின் வரலாறு' என்னுந் தமது நூலில் கூறுகின்றார். மற்றும் சில புலவர்கள், பெயர்ச் சொற்களேயன்றி, வினைச் சொற் களும் உரிச் சொற்களும் இடைச் சொற்களுங்கூட தமிழிட மிருந்து வடமொழி கடன் பெற்றுக் கொண்டதாகக் கூறுவர். ஏன்? தமிழுக்குரிய சிறப்பெழுத்துக்கள் சிலவும் வட மொழியோடு சேர்ந்திருக்கின்றன என்கின்றனர். இந்தக் கருத்துக்கு மாறாக, தமிழ்மொழியின் சொற்களோ, எழுத் துக்களோ வடமொழியில் சேரவில்லை என்றால், அதற்கும் காரணம் உண்டு. இதோ, சாஸ்திரியார் கூறுகிறார்:

"வடமொழி தமிழ் மொழியோடு கலக்கப்புகும் முன்னரே, முன்னது பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டிலிருக்கும் நிலைமைக்கு வந்துவிட் டது. ஏட்டு வழக்குஉள்ள பாஷையோடு இருவகை வழக்கு முள்ள பாஷையொன்று கூடியியங்கப் புகுமாயின் முன்னதன் சொற்களே பின்னதன்கட் சென்றுசேருமேயன்றிப் பின்னதன் சொற்கள் முன்னதன்கட் சென்று சேரா. இது பாஷை நூலின் உண்மைகளுள் ஒன்று. இதுவே வழக் காற்று முறை. இம்முறை பற்றியே, வட சொற் கள் பல தமிழின்கண் புகுந்தன. தமிழ்ச் சொற் களில் சில தாமும் வடமொழியின் கண் ஏறாமற் போயின"

என்று 'தமிழ் மொழியின் வரலாறு' என்ற நூலில் குறிப்பிடுகின்றார் வி. கோ. சூ. சாஸ்திரியார்.

இதிலிருந்து, பேச்சு வழக்கு, ஏட்டு வழக்கு ஆகிய இரண்டிலும் உள்ள ஒரு மொழியில் காரண காரியத் தொடர்பால் இன்னொரு மொழியின் சொற்கள் கலப்பது இயற்கை என்பது புலனாகும். இதற்குத் தமிழ் மட்டும் விலக்காக இருத்தல் முடியாது.

இன்று உலக மொழியாக விளங்கும் ஆங்கிலத்தில் கூட, பிரெஞ்சு, லத்தீன், கிரீக்கு ஆகிய மொழிகளின் சொற்கள் ஏராளமாகப் புகுந்துள்ளன. இந்தக் கலப்பின் காரணமாக ஆங்கில மொழி வளம் பெற்றதோடு, உலக மொழியாக வருவதற்கும் அதற்கு வாய்ப்புக் கிடைத்தது. ஆகவே, தமிழ் தனித்தியங்கும் மொழியாக இருப்பினும் அது வளர்ச்சி பெறுவதற்குக் காலப்போக்கில் - தேவைப்படும் போதெல்லாம் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ள வேண்டி யிருக்கிறது. ஏற்றுக்கொண்டும் வந்திருக்கிறது.

சங்க இலக்கியத்திலும் கலப்பு

மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்டதாகச் சொல்லப்படும் தொல்காப்பியத்திலும் வடமொழிச் சொற்கள் ஒருசில கலந்துள்ளன. புறநானூறு, அகநானூறு, திருக்குறள் முதலிய சங்க இலக்கியங்களும் இந்தக் கலப்புக்கு விலக்கன்று. கலப்பு மிகாமல் போனதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று, சங்க இலக்கியங்கள் செய்யுள் நடையில் அமைந்தவை என்பதாகும்.

மற்றொன்று, அவை சமய நூற்களாக அல்லாமல் சமூக இலக்கியங்களாக இருத்தலாம்.

பிற்காலத்தில், உரைநடை தோன்றிய பிறகே வடமொழிச் சொற்களின் கலப்பு மிகுந்தது. பேச்சு வழக்கிலுள்ள வடமொழிச் சொற்கள் எல்லாம் உரை நடை நூற்களில் கலந்தன. மற்று, சமய உணர்வு, பரத கண்டம்

முழுதிலும் உள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவாக இருந்தலால், பிற்காலத்தில் தோன்றிய சமய நூற்களில் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்தன. இந்த வரலாற்று நியதியை ஒட்டி சமஸ்கிருதச் சொற்களேயன்றி, சமண—பௌத்த சமயங்களுக்குரிய பாலி மொழிச் சொற்களும், இஸ்லாத்திற்குரிய உருது—பாரசீகச் சொற்களும், கிறிஸ்துவத்திற்குரிய ஆங்கில—லத்தீன் சொற்களும் தமிழ் மொழியிலும் தமிழர் வாழ்விலும் மிகுதியாகப் புகுந்துவிட்டன.

'குற்றவாளிகள்' ஒருவரல்லர்; பலர்!

பிறமொழிச் சொற்களை வரம்பின்றித் தமிழில் கலந்தவர்கள் 'குற்றவாளிகள்' என்றால், அந்த குற்றத்தைச் செய்தவர்கள் சம்ஸ்கிருத மொழிக்குரிய சனாதனிகள் மட்டுமேயல்லர். சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் என்று இவ்வாறு பலவகைப்பட்ட சமயங்களின் சார்பில் தமிழ்மொழியில் "கை" வைத்தார்களே, அவர்கள் அனைவருமே 'குற்றவாளிகள்' தாம். ஆனால், அன்னார் தமிழ் வளர்ச்சிக்கும் தொண்டு செய்துள்ளனர் என்பதனை மறப்பதற்கில்லை.

சிலப்பதிகாரக் காப்பியம் தமிழினத்தின் பெருமையை உலகுக்கு அறிவிக்கும் ஒளி விளக்காகும். அதன் ஆசிரியர், மூவேந்தர் மண்டிலங்களாகப் பிரிந்துகிடந்த தமிழ் நிலத்தை ஒன்றுபடுத்திக் காட்டுகின்றார். பல்வேறு சமயப் பிரிவுளாகக் காட்சி யளித்த தமிழ்க் குலத்தை இனவழி ஒன்றுபடுத்துகின்றார். தமிழருடைய மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றை யெல்லாம் படிப்போர் நாவினிக்க, கேட்போர் செவியினிக்கக் கூறுகின்றார். இடைஇடையே வடமொழிச் சொற்கள் இலைமறை காயென இடம் பெற்றிருப்பினும் 'நல்ல தமிழி'ல் தம் காப்பியத்தை அமைத்துள்ளார் இளங்கோ.

சமணர்களின் 'தமிழ்'

அந்தக் காப்பியத்தில் வரும் சமண சமயப் பாத்திரமான கவுந்தியடிகள் அருக தேவனை வழிபடுமிடத்தில் மட்டும் கலப்படத் தமிழையே காட்டுகின்றார் இளங்கோ.

அறிவன் அறவோன், அறிவு வரம்பு இகந்தோன்,
செறிவன், *சினேந்திரன்*, *சித்தன்*, *பகவன்*,
தரும முதல்வன், தலைவன், *தருமன்*,
பொருளன், *புனிதன்*, *புராணன்*, புலவன்,
சினவரன், *தேவன்*, *சிவகதி நாயகன்*,
பரமன், *குணவதன்*, *பரத்தில்* ஒளியோன்,
தத்துவன், *சாதுவன்*, *சாரணன்*, *காரணன்*,
சித்தன், பெரியவன், செம்மல், திகழ்ஒளி,
இறைவன், குரவன், இயல்குணன், எம்கோன்,
குறைவில் *புகழோன் குணப்பெருங் கோமான்*,
சங்கரன், *ஈசன்*, *சயம்பு*, *சதுமுகன்*,
அங்கம் பயந்தோன், அருகன், அருள்முனி—

இந்த வரிகளில், சமணத்துறவியான கவுந்தியடிகள் அருக தேவனை வழிபடுகின்றார். மொத்தமுள்ள நாற்பத்தைந்து சொற்களில் இருபத்தைந்து சொற்கள் வடமொழிச் சார்புடையவை.

மணிப்பிரவாளம் காணீர்!

அடுத்து, சமண சமய நூலான "ஸ்ரீபுராணத்தை"ப் பார்ப்போம் :

"*ஒருநாள்* மஹா மேருபர்வத நந்தன வனத்துப் பூர்வதிக்ஜின பவனத்தை *அடைந்து*, ப்ரதக்ஷிணீகரண ப்ரணாமஸ்தவநாப்யர்ச்சனம் *பண்ணியபின்*, *அங்கே*, ஸந்நிஹிதராகிய விபுலமதி சாரண தபோதனரை நமஸ்கரித்து தர்மஸ்ரவணாநந்தரம், '*என்* ஸ்வாமி! புத்திரியாகிய கந்தர்வ

தத்தை, யாவர்க்கு யோக்யை' என்று யான் வினவ, அவரும் அவதி ஞானத்தாற் பார்த்து அருளிச் செய்வார்: 'ஜம்பூத்விப பரத க்ஷேத்ர ஹேமாங்கத விஷய ராஜமஹா நகரத்து ஸத்யந்தர மஹாராஜபுத்ரனுக்கு வீணாஸ்வயம்வரத்தால் தேவியாகும்' என்று அருளிச் செய்தனர்."

"ராஜ மஹா புரத்து வ்ருஷபதத்த ஸ்ரேஷ்டிக்கும் பத்மாவதிக்கும் புத்திரன், ஜினதத்த னென்பான். அவனால் நமது அபிப்பிரேத கார்யம் ஸித்திக்கும். அ:து எவ்வண்ணமென்னின், ராஜ மஹாபுர ஸமீபமாகிய ப்ரீதிவர்த்தன மென்னும் உத்யானத்து ஸாகரசேன கேவலிகளுக்குக் கேவல பூஜார்த்தமாக நின் பிதாவினொடுங் கூடச் சென்று கேவல பூஜை பண்ணிய பின், தர்ம வாத்ஸல்யத்தால் வ்ருஷபதத்த ஜினதத்தர்களோடு பாந்தவ முண்டாயிற்று. அதன் பின் வ்ருஷபதத்தன், புத்ரனுக்கு ஸ்ரேஷ்டிப் பதங் கொடுத்து குணபால முனி சமீபத்தே தீக்ஷித்தனன். பத்மாவதியும் ஸுவிர்தை யென்னும் ஆர்யாங்கனைப் பக்கல் தீக்ஷித்தனள். ஸ்ரேஷ்டி பத ப்ராப்தனாகிய ஜினதத்தனும் வாணிஜ்யார்த்தமாக ஜல யாத்திரையால் இங்கே வருவன்."

'இது, தமிழா?' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? ஆம்; 'இதுதான் தமிழ்' என்று செய்து விட முயன்றனர் ஸ்ரீபுராண பக்தர்களான சமணர்கள்!

பௌத்தர் செய்த கலப்படம்

மேலே எடுத்துக் காட்டியுள்ள வரிகளில், 125க்கு மேற்பட்ட சொற்களில் 34 சொற்கள் மட்டுமே தமிழுக்குரியவை. வடமொழிச் சொற்களே மிகுதியாக இருத்தலால், வழக்கத்

திற்கு மாறாக, தமிழ்ச் சொற்களைத் தடித்த எழுத்தில் காட்டினோம்.

இதற்கு 'மணிப்பிரவாளம்' எனப் பெயரிட்டனர் கலப்படக்காரர்கள்! சமண சமயத்தினர் மணிப்பிரவாளத்தைத் தோற்றுவிக்கும் முன்பே, தமிழ்மொழியில் கலப்படம் செய்த பெருமை பௌத்த சமயத்தினருடையதாகும்.

"புத்தம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி" என்ற பாலி மொழி மந்திரச் சொற்களும் தமிழர் நாவில் நடமாடலாயின.

தமிழில் கலப்படம் செய்த 'பெருமை'யில் சமண, பௌத்த சமயங்களுக்கு அடுத்தபடியாக நம் கவனத்துக்கு வருவது வைணவமாகும்.

வைணவரின் மணிப்பிரவாளம்

பெரியவாச்சான் பிள்ளை என்ற வைணவப் பெரியார், நாலாயிரப் பிரபந்தப் பாடல்களனைத்திற்கும் விரிவுரை எழுதியுள்ளார். அதற்கு 'ஈடு' எனப் பெயர் தரப்பட்டிருக்கிறது. அந்த ஈடு அப்பட்டமான மணிப்பிரவாளத்தில் எழுதப்பட்டதாகும்.

> "*சார்வ பௌமராய்ப்* போந்த ***இராஜாக்கள்*** அந்த *ராஜ்ய ஸ்ரீயை* இழந்து இரந்து உயிர் வாழ வேண்டும்படி வறியர் ஆவார்கள்; ஆனபின்பு, "*ஸ்ரீவத்ஸ யக்ஷா நித்யஸ்ரீ—ஸ்ரீ வத்சத்தை* மார் பிலேயுடையவன்; *நித்யமான ஸ்ரீயை*யுடையவன்."
>
> ***இப்பாசுரத்திற்கு*** *ஏக மூர்த்தி* என்பது ***பரத்துவத்தைச்*** சொல்லுகிறதென்றும், இரு ***மூர்த்தி*** என்பது ***யூகத்தைச்*** சொல்லுகிறது; அதாவது; ***வாசுதேவ ஸங்கர்ஷணரைச்*** சொல்லுகிறது என்றும், மூன்று ***மூர்த்தி*** என்பது ***யூகத்தில்*** மூன்றும் ***மூர்த்தியான பிரத்யும்நரைச்***

சொல்லுகிறதென்றும், பல *மூர்த்தி* என்பது, *அவதாரத்தைச்* சொல்லுகிறதென்றும், ஐந்து *பூதமாய்* இரண்டு சுடராய் அறிவாகி *நாகம்* ஏறி, நடுக்கடலுள் துயின்ற *நாராயணனே!* என்பது இன்னார் *சிருஷ்டிக்கக்* கடவர்; இன்னார் பாதுகாத்த லுக்குக் கடவர் என்கிறபடியாலே, சொல்லுகிற தென்று *நிர்வகிப்பாரும்* உளர்.

இவை, திருவாய்மொழி ஈட்டின் பகுதிகளாகும்.

இதோ, 'சைவத்' தமிழ்!

இனி, தமிழ் மொழிக்கே உரிய சமய மெனப்படும் சைவத்தைப் பார்ப்போம்.

"*காமிகம்* முதலிய சைவ *ஆகமங்க*ளுண் *ஞான பாதத்தி*னுளதாகிய *ஆசங்கை* நீக்கி, அவற்றின் பொருளுண்மை பொது வியல்பு, சிறப் பியல்பு என்று இரு வேறு வகைப்படுத்திக் காட்டிப் *போதித்தற்கு*, *இரௌரரகமத்தின்* எழுந்த *சிவ ஞானபோத* நூலினைத் *தமிழுலகம்* உய்தற் பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து, பொழிப் புரைப்பான் எடுத்துக்கொண்ட *ஆசிரியர் சாக்கி ரத்தே அதீதத்தைப்* புரியுந் தமக்கு இடையூறு சிறிது மணுகாமை அறிந்தாராயினும், ஆன்றோர் *ஆசாரம்* பாதுகாத்தற் பொருட்டும், *மாணுக்கர்க்* கறிவுறுத்தற் பொருட்டும், முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய *விநயகம்* கடவுளை வாழ்த்துவ தாகிய *மங்கல* வாழ்த்துக் கூறுகின்றார்."

இது, சிவஞானபோதம் என்னும் சைவ சாத்திர நூலுக்கு எழுதப்பட்டுள்ள சிற்றுரையில் மங்கல வாழ்த்துப் பாடலுக் குரியதாகும்.

இதிலிருந்து, சமய சாத்திர நூல்களில் வடமொழிச் சொற்கள் கலப்பதை முற்றிலும் தவிர்ப்பது சாத்தியமில்லை யென்பது புலனாகும்.

கிறித்துவர் ' தமிழ் '

தமிழகத்துக்கேயன்றி, பாரதப் பெருநிலத்திற்கும் புறச் சமயங்களாகிவிட்ட கிறித்துவ, இஸ்லாமிய சமயங்களின் வரவாலும் தமிழில் பிறமொழிச் சொற்கள் புகலாயின.

கிறித்துவ வேத நூலாகிய பைபிள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

> " அதிலிருந்த ***நரஜீவன்களை யெல்லாம்*** பட்டயக்கருக்கினால் வெட்டி, ***சங்காரம்*** பண்ணினார்கள். ***சுவாசமுள்ளது*** ஒன்றும் மீதியானதில்லை. ***ஆத்சோரையோ அக்கினியால்*** சுட்டெரித்தான்."
>
> " ***யுத்தம்*** பண்ண ***இஸ்ரவேலுக்கு*** எதிராக வரும்படிக்கு, அவருக்கு ***ஹிருதயம்*** கடினமானதும், இப்படியே அவர்களின்பேரில், இரக்கம் உண்டாகாமல் ***கர்த்தர் மோஸேக்குக்*** கட்டளையிட்டபடி அவர்களை அழித்து ***ஸங்காரம்*** பண்ணினதும் ***கர்த்தரால்*** வந்த ***காரியமா யிருந்தது.***"
>
> —யோசுவா. 11

மேலே எடுத்துக் காட்டியுள்ள பகுதியில் பிறமொழிச் சொற்கள் மிகுதியும் கலந்திருக்கக் காணலாம்.

சங்க காலத் தமிழகத்தில், தமிழ் மன்னர்கள், புலவர்கள், மற்றுள்ள மக்கள் ஆகியோருடைய பெயர்களெல்லாம் தமிழிலேயே அமைந்திருந்தன. காரி, பாரி, ஓரி, வளவன், குட்டுவன், செழியன் என மன்னர் பெயர்களும்; கீரன், நக்கீரன், குட்டுவன் கீரன், அரிசில் கிழார், கோவூர் கிழார், அடியநெடுவேட்டுவன், நப்பசலையார், நச்செள்ளையார், காக்

கைப் பாடினியார், ஔவையார் எனப் புலவர் பெயர்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

மன்னர்கள் பெயர்களில் மாறுதல்

சமய உணர்வு பெருகி, அகச் சமயங்களும், புறச் சமயங்களும் போராடும் களமாகத் தமிழகம் மாறிய இடைக் காலத்தில், மன்னர்கள்—புலவர்கள் பெயர்களும் மதவழி பிறமொழிகளில் மாறின.

ராஜசிம்மன், நரசிம்மவர்மன், ராஜராஜன், ராஜேந்திரன், அரிகேசரி, பராக்கிரமன் என மன்னர் பெயர்களும்; ***சுப்ரதீபக் கவி, அதிவீரராமன், ஜெயங்கொண்டான், குமர குருபரர், சிவப்பிரகாசர், மீனாட்சி சுந்தரர்*** எனப் புலவர் பெயர்களும் வடமொழியில் அமைந்திருத்தலைப் பார்க்கிறோம்.

மற்றும், மக்களானோரும் ***நாராயணன், கிருஷ்ணன் அனந்தராமன், சுப்ரமண்யம், லக்ஷ்மி, சரஸ்வதி*** எனப் பிறமொழிப் பெயர்களைச் சூட்டிக் கொண்டுள்ளனர்.

பெயர்களெல்லாம் தமிழிலிருந்து வடமொழிக்கு மாறிய புரட்சி மன்னர், புலவர், மக்கள் என்பாரோடு நிற்கவில்லை. கடவுளர்களையும் ஊர்களையும் கூடப் பற்றிக் கொண்டன.

வழித்துணை நாயனார் '***மார்க்க சகாயராக***' மாறினார்; இளமுலை நாயகியார் '***பால குஜாம்பாள்***' எனப் பெயர் பெற்றார். தெய்வத் தலங்களும் இதற்கு விலக்கல்ல. மறைக் காடு ***வேதாரண்யமாக***வும், திருமுதுகுன்றம் ***விருத்தாசலமாக***வும், திருவரங்கம் ***ஸ்ரீரங்கமாக***வும் மறுபிறப்பெடுத்தன.

மதம் மாறியதால், மொழி மாற்றம்!

இந்த மாறுதல்களெல்லாம் இந்து சமயத் தமிழர்களிடை ஏற்பட்டவையாகும். இதனால் தமிழை, தமிழகத்தின் ஊர்ப் பெயர்களை, மக்கள் பெயர்களை வடமொழி மயமாக்கிய குற்றத்தைப் பார்ப்பனப் புரோகிதர்மீதே சுமத்துகின்றனர் ஒரு சாரார்.

ஆனல், வரலாற்றை நடுவு நிலைமையுடன் ஆராயுமிடத்து, இந்து சமயப் புரோகிதர்களேயன்றி, இஸ்லாமிய 'மௌல்வி'களும், கிறிஸ்துவப் 'பாதிரிமார்'களும் கலப்படத் "திருப்பணியில்" கலந்திருப்பதைக் காணலாம்.

தமிழகத்தின் குடிமக்களாக உள்ள இஸ்லாமியர்களில் மிகப் பெரும்பாலோர் இந்து சமயத்திலிருந்து விலகிச் சென்றவர்களின் வழித் தோன்றல்களேயாவர். அத்தனை முஸ்லிம்களும் அயல்நாடுகளிலிருந்து வந்தவர்களின் சந்ததியாரென்று சாதிப்பதற்கில்லை. அப்படியிருந்தும், புறச் சமயத்தைத் தழுவியதன் காரணமாக அவர்களுடைய பெயரும் தமிழுக்குப் புறம்பாகிவிட்டது. இஸ்லாமியத் தமிழர்கள், 'சுபான்', 'ரஹீம்', 'ஸிபக்துல்லா', 'அப்துல்லா', 'இஸ்மாயில்', 'ஸலீம்', 'சாந்த் பீபி' என்ற பெயர்களை வாழையடி வாழையாக வைத்துக்கொண்டு வருகின்றனர்.

கிறிஸ்துவத் தமிழர்களும், 'ஜேஸுபாதம்', 'ஆசீர்வாதம்', 'அந்தோணி', 'மேரி' என்ற பெயர்களை வைத்துக்கொண்டுள்ளனர்.

தமிழ் மொழியின் இலக்கண முறைப்படி ல், ட், ர் என்ற எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாரா. இந்த மரபுக்கு மாருக, கிறிஸ்துவத் தமிழர்கள் "டேனியல்" "டேவிட்", லூர்து", "லூயிஸ்" என்றெல்லாம் பெயர்கள் வைத்துக்கொண் டிருப்பதைப் பார்க்கிறோம். இஸ்லாமியத் தமிழர்களிடையேயும் லத்தீப், லப்பை, ரஹீம் என்ற பெயர்கள் வழக்கிலிருக்கின்றன.

மதமும் மொழியும்

இந்து சமயத்தைச் சார்ந்த பார்ப்பனப் புரோகிதத் தமிழர்கள் வடமொழியில் உள்ள வேதாகம நூல்களைப் பயில்வதுபோலவே, இஸ்லாமியத் தமிழர்களாக உள்ள மௌல்விகளும் அரபு மொழியிலுள்ள "குர்ஆன்" என்னும் வேத நூலைப் பயில்கின்றனர். அப்படியே கிறிஸ்துவத் தமிழர்கள் லத்தீன் வழி வந்த வேத நூலான 'பைபிளை'ப் பயில்கின்றனர்.

பேசும் மொழி வழிப்பட்ட இனம் வேறு; தெய்வ நெறி வழிபட்ட மதம் வேறு. ஒவ்வொரு மதமும் பல்வேறு மொழிகளைப் பேசும், வெவ்வேறு இனங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்றன. அதனால், மத வழிப்பட்ட பொது மொழி ஒன்றையும், ஒவ்வொரு மதமும் பெற்றிருக்கின்றது. இஸ்லாமியருக்கு அரபும், கிறிஸ்துவருக்கு லத்தீனும் மத மொழிகளாக உள்ளனபோல, இந்துக்களுக்கு சமஸ்கிருதம் மத மொழியாக இருக்கிறது.

இந்த உண்மையைத் தனித் தமிழ்க் கட்சியார் மறந்து விடுகின்றனர்.

கலப்பு தவிர்க்க முடியாதது

இஸ்லாமியத் தமிழர்களால் இயற்றப்படும் சமய நூற்களில் அரபுச் சொற்கள் கலப்பது போலவும், கிறிஸ்துவத் தமிழர்களிடையே லத்தீன் அல்லது ஆங்கிலச் சொற்கள் வழங்கப்படுவது போலவும், இந்துத் தமிழரிடையே தோன்றும் சமய நூற்களில் வடமொழிச் சொற்கள் கலந்து விடுகின்றன. மதத்தில் ஆழ்ந்த பற்றுடையவர்கள் இதைக் குற்றமாகவோ, அல்லது குறையாகவோ கருதாதது இயற்கை. தனித் தமிழ்க் கட்சியின் தலைவர் எனப்படும் மறைமலையடிகளார்கூட சமய சம்பந்தமான கலைச் சொற்களை வடமொழியிலுள்ளபடியோ அல்லது தமிழ் இலக்கண வழியில் திருத்தியோ கையாண்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

பொதுவாக, தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டு வாழும் தமிழர்களாயுள்ள இந்துப் புரோகிதர்களோ, இஸ்லாமிய மௌல்விகளோ, கிறிஸ்துவப் பாதிரிகளோ, தமிழை வெறுப்பவர்களல்லர். அன்றில், தமிழின் வளர்ச்சிக்குப் பணியாற்றியுள்ள அறிஞர் பெருமக்கள் பலருளர். அவர்கள் சமஸ்கிருதம், அரபு, லத்தீன் ஆகிய மொழிகளில் உள்ள வேத, ஆகம நூல்களிடம் பற்றும் பக்தியும் வைத்திருப்பதற்குக் காரணம், அவை சமய நூல்கள் என்பதே யாகும். மற்றபடி தமிழின்பால் உள்ள வெறுப்போ, தாங்கள் தமிழரல்லர் என்ற உணர்வோ காரணமன்று.

தமிழுக்கு வாழ்வளித்தோர்

தமிழின்பால் தங்களுக்குள்ள பற்றுதல் காரணமாக, தத்தம் சமய மறைகளான நால்வேதம், பைபிள், குர்-ஆன் ஆகியவற்றை தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். தாங்கள் வழிபடும் தெய்வங்கள்மீது தமிழில் ஏராளமான தோத்திரப் பாக்களும் இயற்றியுள்ளனர்.

தமிழுக்கே உரிய சமயமெனப்படும் சைவ சமயத்தைச் சார்ந்த ஆச்சாரியர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள பணிகள் அளவில. தேவாரப் பதிகங்கள், திவ்யப் பிரபந்தப் பாசுரங்கள், மற்றுள்ள பிரபந்த நூல்கள் ஆகியவற்றை இயற்றிய சமயப் பெரியார்கள் தமிழுக்கு வாழ்வளித்த 'தாதாக்கள்' ஆவர்.

தமிழ் மொழியிலும், தமிழர் "வழி"யிலும் கொண்ட தளராப் பற்றுக் காரணமாகத்தான் வைணவ சமயத்தாரிடை வடகலையார்-தென்கலையார் என்ற பிரிவுகள் தோன்றின.

தமிழகத்திற்குப் புறச்சமயங்களாகிவிட்ட சமண, பௌத்த மதங்களைச் சார்ந்த துறவிகளிலும் பலர் தமிழ் வளர்ச்சிக்குப் பணி புரிந்துள்ளனர். மணிமேகலை, குண்டல கேசி ஆகிய இரு காப்பியங்கள் தமிழ் அன்னைக்குப் பௌத்தர்கள் தந்த காணிக்கையாகும். சிந்தாமணி, பெருங்கதை போன்ற காப்பியங்களையும், நாலடியார் போன்ற நீதி நூல்களையும் தமிழில் யாத்துத் தந்த பெருமை சமணர்களுக்கே உரிமை. அப்படியே, இஸ்லாமிய - கிறிஸ்துவ சமயங்களைச் சார்ந்த ஞானியர் பலரும் தமிழ் வளர்ச்சிக்குப் பணிபுரிந்துள்ளனர். பெஸ்கி என்ற மேனாட்டுப் பெருமகனார், தமிழகத்தில் குடியேறிய கிறிஸ்தவப் பாதிரியாவார். போப் என்பாரும் அத்தகையாரே. இவ்விரு பெரியார்கள் தமிழுக்குச் செய்துள்ள தொண்டுகளும் தங்களைத் தமிழர்களாகவே கருதிய பெருமையும் தமிழர் மறக்க முடியாதவையாகும்.

திரு. கிருஷ்ணப்பிள்ளை என்ற கிறிஸ்துவத் தமிழர் 'இரட்சணிய யாத்ரிகம்' என்ற சிறந்த இலக்கியத்தைத் தமிழில் இயற்றினார்.

இஸ்லாமியத் தமிழர்களிலும் தமிழை வளர்த்த பெருமைக்குரியோர் எண்ணற்றோர். உமர்ப்புலவர் இயற்றிய 'சீறாப் புராணம்' அதற்கு ஒரு சிறந்த சான்றாகும்.

பார்ப்பனத் தமிழர்களிலேயும் கபிலர் - நக்கீரர் போன்ற சங்க காலப் புலவர்களும், நச்சினார்க்கினியர் - பரிமேலழகர்

போன்ற இடைக்கால உரையாசிரியர்களும், சுப்பிரமணிய பாரதி - உ. வே. சாமிநாதையர் போன்ற இந்த நூற்றுண்டில் வாழ்ந்த அறிஞர் பெருமக்களும் தமிழுக்குச் செய்துள்ள பணியைத் தமிழர் மறந்தாலும், தமிழ் மொழி மறவாது.

சமயவழி கலேச் சொற்கள்

சமய உணர்ச்சி காரணமாக, சமய சாத்திர - தோத்திர நூற்கள் தோன்றியதன் விளைவாகப் பிறமொழிச் சொற்கள் சில தமிழிலே கலந்திருப்பினும், அதனுல் தமிழ் அழிந்து விடவில்லே ; வளர்ந்தது.

சனுதனம், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்துவம் ஆகிய புறச்சமயங்கள் தமிழகத்தில் புகுந்து நிலேத்து விட்டமையால், அவற்றேடு தொடர்புடைய சமஸ்கிருதம், பாலி, பாகதம், அரபு, உருது, லத்தீன், ஆங்கிலம் ஆகிய பிற மொழிகளின் சொற்கள்-குறிப்பாக, சமயக் கலேச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டன. மறைமலே யடிகளார் போன்ற தனித்தமிழ்ப்பற்றுளர்கூட சமயங்களோடிணேந்த கலேச் சொற்களேத் தமிழிலிருந்து விலக்க இயலாமற் போயின.

இந்நிலே, பிரதேச மொழிகளிலே தமிழ் ஒன்றுக்கு மட்டுமல்லாமல், ஏனேய மொழிகளுக்கும் ஏற்பட்டுள்ளன. அதாவது, சமயத்துறையில் பிரதேச மொழிகள் இரண்டாந்தரமாக்கப்பட்ட நிலே இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலுமே நிலவி வருகின்றது. இந்து ஆலயங்களில் வழிபாடு சமஸ்கிருதத்தில் நடைபெறுகிறதென்ருல், இஸ்லாமியருடைய பள்ளி வாசல்களில் அரபு மொழியில் நிகழ்கின்றதைப் பார்க்கின்ருேம். கிறிஸ்துவர்களின் கோயில்களிலும் லத்தீன் புனித மொழியாகக் கருதப்படுகின்றது.

இந்த உண்மையை உணராமல், தமிழகத்திலுள்ள இஸ்லாமியரையும், கிறிஸ்துவரையும் தமிழ் இனத்திற்குப் புறம்பானவராகப் பிரித்து வைத்துவிட்டு, "தனித் தமிழ்க் கட்சி" பேசுவது இன வரலாற்றுக்குப் பொருந்தாத வாத

மாகும். அரபு, உருது, லத்தீன், ஆங்கில மொழிகளின் கலப்படங்களை மறந்து, வடமொழிக் கலப்பு ஒன்றைமட்டுமே வெறுப்பதும் நேர்மையான செயலன்று.

பொதுவாக, எந்த ஒரு மொழிமீதும், தமிழகத்தில் வாழும் மக்களிலே எந்த ஒரு மதத்தார் அல்லது வகுப்பார் மீதும் வெறுப்பின்றி, இந்தப் பிரச்சினையை ஆராயவேண்டு மென்பதைத் திரும்பவும் வலியுறுத்துகிறேன்.

தமிழில் அருச்சனை

தமிழகத்துக் கோயில்களிலே அருச்சனை தமிழில் நடைபெறவேண்டும் என்ற ஒரு கோரிக்கை, தக்கார் சிலரால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இது வரவேற்கத் தக்கதே. ஆகம முறைப்படி கோயில்கள் அமைந்த ஆரம்ப காலத்தில், இன்றுள்ளது போன்ற அருச்சனை வழிபாடு இருந்ததென்று சொல்வதற்கில்லை. இருந்திருப்பினும் வடமொழியில்தான் நிகழ்ந்ததென்பதற்குத் தமிழ் இலக்கியங்களில் சான்று இல்லை. ஆகவே, ஆலயங்களில் அருச்சனை தமிழில் நடைபெற வேண்டுமென்ற கோரிக்கை நமக்கு உடன்பாடே.

ஆனால், இங்கு ஒன்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இது முற்றிலும் சமயத் தொடர்புடைய பிரச்சனை. ஆட்சி மொழி, போதனுமொழிப் பிரச்சனை போன்று தமிழ் இனத்தவர் எல்லோருக்குமுரிய சமூகப் பிரச்சனையன்று. ஆகவே, சமய நம்பிக்கை யற்றோரும், ஆலய வழிபாட்டைக் கடமையாகக் கொள்ளாதோரும் இந்தப் பிரச்சனையில் கலந்துகொள்வது "சிவ பூசையிற் கரடி புகுந்தது" என்பார்களே, அதுபோலத்தான். சமயத்தில் நம்பிக்கை உடையவர்கள் மட்டுமே, இந்தப் பிரச்சனையில் கலந்து கொள்ளும்போதும் வடமொழிக் காழ்ப்புக்கு இரையாகக்கூடாது. இஸ்லாமியருக்கு அரபு சமய மொழியாக இருப்பது போல, கிறிஸ்துவருக்கு லத்தீன் சமயப் பொது மொழியாக இருப்பதுபோல, இந்துக்கள் எல்லோருக்கும் சமஸ்கிருதம் மத மொழியாகும். இந்த

மத உணர்வுக்கும் ஒற்றுமைக்கும் கேடு நேராத வகையில், அருச்சனை மொழி பற்றிய பிரச்சனை விவாதிக்கப்பட வேண்டும். தமிழ்மொழி, தமிழரிலே குறிப்பிட்ட ஒரு சமயத்தினருக்கு மட்டும் உரிமையானதன்று.

பண்டைக்கால நிலை எதுவாயினும், அகச் சமயங்களின் எண்ணிக்கை பெருகி, புறச்சமயங்களும் புகுந்து நிலைத்து விட்ட இந்நாளில், எல்லா சமயங்களையும் சார்ந்துள்ள தமிழர் அனைவருக்கும் பொதுவானது தமிழ்மொழி. இதனை மறந்து, "தமிழர்" என்ற இன உணர்ச்சிக்குத் தூபமிட்டு, இந்துக்களிடையே மட்டும் அருச்சனை மொழிக் கிளர்ச்சியை நடத்துவது முறை தவறிய செயலாகும். "தமிழர்" என்ற இன உணர்ச்சியை இதில் கலப்பதானல், இஸ்லாமியத் தமிழர்களின் மசூதிகளிலும் தமிழிலே வழிபாடு நடத்தக் கிளர்ச்சி செய்ய வேண்டும். இந்தச் சிக்கலில் சிக்கிக் கொள்ளாமற் தப்புவதற்கான ஒரேவழி, சமயத் துறையில் தமிழுக்கு மறுமலர்ச்சி தேடும் பொறுப்பை அந்தந்த சமயாச்சாரியர்களிடம் ஒப்புவிப்பதேயாகும்.

கலப்படம் நேர்ந்த காலம்

தமிழகத்தின் வரலாற்றை ஆராய்ந்தால், கி. பி. 14ஆம் நூற்றுண்டு தொடங்கி, 20ஆம் நூற்றுண்டின் சரிபாதி வரையுள்ள காலகட்டத்தில் பிற மொழியினரின் ஆட்சியே இங்கு நடைபெற்றிருக்கின்றது. பல்லவர்கள் தமிழினத்தைச் சார்ந்தவர்களா, அல்லது வடநாட்டவரா என்ற ஆராய்ச்சி இன்னமும் முடிவு பெறவில்லை. அதன் முடிவு எதுவாயினும் சரி; பல்லவர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்தில்தான் வடமொழியின் 'செல்வாக்கு' அசைக்க முடியாத "ஆதிக்கமாக" மாறியதென்பதை மறப்பதற்கில்லை. வடமொழி ஒன்று மட்டுமேயன்றி, அம்மொழி வழிப்பட்ட கலையும், கலாச்சாரமும் தமிழினத்தவரின் வாழ்க்கையை அதிகமாக ஊடுருவியது பல்லவர் காலத்தில்தான்.

பல்லவர்களுக்குப் பிறகு, விஜயநகர, மகாராஷ்டிர, மொகலாய, ஆங்கிலேய வல்லரசுகளின் ஆதிக்கம் தமிழகத்தில் நிலவின. அந்தக் காலங்களில் தமிழ்மொழியின் வளர்ச்சி குன்றியது; வாழ்வு மங்கியது. அந்த வல்லரசுகள் எல்லாம் வேற்று மொழிகளைப் பேசியவர்களுக்கு உரியவையாதலால், மூவேந்தர் காலத்தைப்போல, தமிழ் மொழியையும், தமிழ்ப் புலவர்களையும் அரசினர் போற்றவில்லை; புறக்கணித்து வந்தனர். அது காரணமாக, புலவர்கள் எல்லாம் சைவ - வைணவ மடங்களிலே அடைக்கலம் புகுந்து வாழத் தொடங்கியதால், 14-ஆம் நூற்றுண்டுக்கும் 20-ஆம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சமய வழிப்பட்ட இலக்கியங்களே இயற்றப்பட்டன.

அதனுலும், வடமொழியின் செல்வாக்கை அதிகரிக்கும் சிற்றிலக்கியங்கள் தமிழில் பெருகின. இது, இயற்கை; எதிர்பார்க்க வேண்டியதுமாகும்.

பல்லவ அரசர்களும், விஜயநகர, மகாராஷ்டிர மன்னர்களும் தமிழகத்தை ஆண்ட காலங்களில் 'சர்க்கார்', 'மந்திரி', 'சிப்பாய்' என்பன போன்ற பிறமொழிச் சார்புடைய சொற்கள் அரசியல் வாழ்வில் நுழைந்தன. மொகலாயர் வழியில் தோன்றிய சுல்தான்களும், நவாபுகளும் ஆண்ட காலங்களில் பர்சி, அரபு, உருது மொழிச் சொற்கள் தமிழில் ஏராளமாகக் கலந்தன. சான்ருக ஜில்லா, தாலுக், கிஸ்தி, வஜா, ரஜா, ஜமாபந்தி, கஜானு போன்றவற்றைக் கூறலாம்.

ஆங்கிலத்தால் நேர்ந்த கேடு

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் புதியதோர் "மணிப் பிரவாளம்" புறப்பட்டதெனலாம். ஆம்; 'தமிழ்' என்ற பெயரே 'டமில்' ஆகிவிட்டது. மதுரை 'மஜுரா' வாகவும், திருச்சிராப்பள்ளி 'ட்ரிச்சி' யாகவும், திருநெல்வேலி டின்னவேலி' யாகவும் தமிழர் நாவில் நடமாடிய கொடுமை

யையும் கண்டுவிட்டோம். படித்தவரே யன்றி, பாமரா நாவிலும் இம் 'மணிப்பிரவாளம்' கோலோச்சியது!

வடமொழி ஒன்றினல் மட்டுமே தமிழ்மொழி சிதைவுற்ற தாகக் கூறும் தனித்தமிழ்க் கட்சியார் ஆங்கில மொழியால் தமிழுக்குற்ற இன்னல்களை அறவே மறந்துவிடுகின்றனர் அந்த இன்னல்கள் எல்லாம் தமிழுக்கு ஏற்பட்ட இன்ப வாழ்வு என்று சொல்லக்கூட அவர்கள் வெட்கப்படவில்லை. ஆனல், சரித்திரம் காட்டும் உண்மைகளை மறைக்கவோ மறுக்கவோ முடியுமா!

இதுவரை நாம் கூறிவந்தவற்றை எல்லாம் நினைவில் கொண்டுவந்து பார்த்தால், தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்ததற்கான காரணங்கள் இரண்டு என்ற உண்மை புலப்படும்.

1. சனுதனம், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ் துவம் ஆகிய புறச் சமயங்களின் வரவு.

2. பல்லவ, விஜயநகர, மகாராஷ்டிர, மொகலாய ஆங்கிலேய வல்லரசுகளின் ஆதிக்கம்.

இதில் மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்னவென்ருல், சுமார் 1500-ஆண்டுகளுக்குமேலாக, பிறமொழியினரின் மத ஆதிக் கங்களும், அரசியல் ஆதிக்கக்களும் தொடர்ந்து நிலைபெற் றிருந்தும், அவர்களால் தமிழ்மொழி முற்றிலும் புறக்கணிக் கப்பட்டு வந்தும், நம் தாய்மொழி அழிந்து விடவில்லை; வாழ்ந்து வந்திருக்கின்றது என்பதுதான். இதிலிருந்து தன் னைக் காத்துக்கொள்ளும் ஆற்றல் தமிழ்மொழியிடம் இயற் கையிலேயே அமைந்திருக்கிறது என்ற உண்மையை அறி கிறோம். 'அந்தோ! தமிழுக்கு அபாயம்' என்று கூறும் 'தனித்தமிழ்க் கட்சி' யார் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ் அழியாது; அழிக்கவும் முடியாது!

'தமிழ் மொழியை பிறமொழிகளின் ஆதிக்கத்திலிருந்து இவர் காப்பாற்றினர், அவர் காப்பாற்றினர்' என்று கூறு

வதில் சிறிதளவு உண்மையிருக்கலாம். ஆனால், தமிழ், தன்னைத்தானே காத்துக்கொண்டு வருகிறது என்று சொல்வது தான் முழு உண்மை.

குறிப்பிட்ட ஒரு சாதியையோ, அல்லது சமயத்தையோ சார்ந்த சிலர், தமிழ் மொழியில் பிற மொழிச் சொற்களை மிகுதியாகப் பெய்து நூல் இயற்றி வெளியிடலாம். அதனாலேயே தமிழ் மொழி அழிந்துவிடுமா? அப்படிப்பட்ட கலப்படக்காரர்களால் தமிழை அழிக்க முடியுமானால், அதனை 'உயர்தனிச் செம்மொழி' என்று உரைக்க முடியுமா?

ஆகவே, தமிழ் மொழியில் பற்றுடைய மக்களிடம் ஒன்று வேண்டுகின்றேன்: "நமது தாய் மொழியான தமிழ், அழியாதது; பிற மொழியினரால் அழிக்கவும் முடியாதது" என்று நம்புங்கள். அந்த நம்பிக்கையை அடிப்படையாக்கித் தமிழை வளர்க்கும் பணியில் ஈடுபடுவோம்.

அடித்தளம் அசைகிறது!

வடமொழியில் ஏராளமான தமிழ்ச் சொற்கள் நுழைந்திருக்கின்றன என்று தனித்தமிழ்க் கட்சியாரிலே சிலர் கூறக் கேட்கிறேன். இது உண்மையானால், எனக்கும் மகிழ்ச்சி தான். ஆனால், இந்த உண்மை தனித் தமிழ்க் கட்சியாரின் அடிப்படையை அசைத்து விடுகிறதென்பதையும் அவர்கள் உணரவேண்டும். பேச்சு வழக்கற்றுவிட்ட வடமொழியிலேயே தமிழ்ச் சொற்கள் ஏராளமாகக் கலந்திருக்குமானால், பேச்சு வழக்கிலும் நூல் வழக்கிலும் உள்ள தமிழில் பிற மொழிச் சொற்கள் கலப்பதைத் தவிர்க்க முடியுமா? 'தமிழருக்கும் ஆரியருக்கும் கலப்பு ஏற்படுவதற்கு முன்பே, வடமொழி பேச்சு வழக்கற்றுவிட்டது' என்று கூறுகின்றனர் ஆராய்ச்சியாளர்கள். அந்த நிலையிலேயே வடமொழியில் தமிழ்ச் சொற்கள் கலந்திருக்கிறதென்றால், சமயரீதியாகவும், அரசியல் வழியாகவும் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்க

ளோடு தொடர்ந்து உறவு வைத்துக்கொண்டு வந்துள்ள தமிழில் பிறமொழிச் சொற்கள் கலக்காமலிருக்க முடியுமா?

தமிழகத்தின் மக்கள் தொகை மூன்று கோடி என்றால், அவர்களிலே முக்கால் கோடிப் பேர் இருமொழியினர் என்று அரசாங்க ஜனக் கணிதம் கூறுகின்றது. இதனையும் தனித் தமிழ்க் கட்சியினர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிறுபான்மையினர் கதி என்னவது ?

தமிழகத்தில், பழங்குடித் தமிழ் மக்களின் வாரிசுகளாக வாழும் இஸ்லாமியர்களை, மதம் காரணமாக அரபு-உருது மொழிகளின்பால் அவர்கள் கொண்டுள்ள பற்றுதலை விட்டு விடும்படி நாம் கேட்க முடியுமா? மத வழியில் பிறமொழியின ரோடும் பிற நாட்டினரோடும் அவர்கள் கொண்டுள்ள கலா சார உறவை வெட்டிவிட நம்மால் முடியுமா ?

அப்படியே, கிறிஸ்துவர்களாகிவிட்ட பழங்குடித் தமிழ் மக்களை, மதம் காரணமாக உலக நாடுகளிலுள்ள கிறிஸ்துவர் களோடு லத்தீன், அல்லது ஆங்கில மொழிமூலம் அவர்கள் வைத்துக்கொண்டுள்ள தொடர்பை அறுத்துக்கொள்ளு மாறு தூண்ட நம்மால் முடியுமா ?

ஆங்கிலேயர் வெளியேறிவிட்ட பிறகும் இந்த நாட் டிலேயே தங்கி, இதனையே தங்கள் தாய் நாடாகக் கொண்டு விட்ட ஆங்கிலோ-இந்தியர்களை அன்னியர்களாகக் கருத முடியுமா? இதை யெல்லாம் செய்யத் தனித் தமிழ்க் கட்சியா ரால் முடியுமானால், இந்துத் தமிழர்கள், மதம் காரணமாக வடமொழியோடும், வடவரோடும் கொண்டுள்ள தொடர்பு களையும் துண்டித்து விடலாம்; துண்டிக்க முயல்வது நியாயமுமாகும்.

இந்தச் சிக்கல்களை எல்லாம் இங்கே நினைவூட்டு வதால், தமிழ் மொழியின் தனித் தன்மையை இனிக் காப் பாற்ற முடியா தென்றோ, அல்லது காப்பாற்றக் கூடா தென்றோ நான் சொல்வதாக யாரும் கருத வேண்டாம். நாம்

வாழ்வது தொல்காப்பியர் காலமல்ல என்பதை நினைப்பூட்டவே, இடைக்காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும், அதனால் மொழித் துறையில் ஏற்பட்டுவிட்ட சிக்கல்களையும் தொகுத்துக் கூறினேன்.

இந்தச் சிக்கல்களை எல்லாம் சீராக்கி, தமிழுக்குரிய 'உயர் தனிச் செம்மொழி' என்ற பெருமையை முடிந்தவரை காக்கவேண்டும் என்பதில் யாரோடும் எனக்குக் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால், பிற மொழிச் சொற்களை தமிழில் கலக்கக்கூடாதென்று கூறுவது, தமிழின் வளர்ச்சிக்குத் தடைபோடுவதாகும்.

கலப்படம் வேண்டாம்!

கலப்பு வேறு; கலப்படம் வேறு. கலக்கப்படும் பொருளின் அசல் தன்மையை அழிப்பது கலப்படம்.

அதுபோலவே, தமிழின் தனித் தன்மையை அழிக்கும் வகையிலோ அல்லது அந்த மொழிக்கே உரிய அழகைக் குறைக்கும் வகையிலோ பிறமொழிச் சொற்களைத் திணிப்பது கலப்படம்தான். அந்தக் கலப்படத்திற்கு நான் எதிரி. ஆனால், தமிழின் வளர்ச்சியைக் கருதி, தமிழ் மக்களின் வாழ்க்கை நலனை ஒட்டி, தமிழின் தனித் தன்மையையும் அழகையும் கெடுக்காமல், பிறமொழிச் சொற்களை வரவேற்பதில் தவறில்லை; வரவேற்கவும் வேண்டும்.

இதுவரை, சங்க காலத்தில், தமிழில் பிறமொழிச் சொற்கள் மிகுதியாக கலவாதிருந்ததன் காரணத்தையும், புராண காலத்தில் புறச் சமயங்களின் வரவால் பிறமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் கலந்ததையும், பிற வல்லரசுகளுக்குத் தமிழகம் அடிமைப்பட்டிருந்த காலத்தில், அரசியலில் பிறமொழிகள் ஆதிக்கம் கொண்டதையும் ஆராய்ந்தோம்.

நிலைமை மாறிவிட்டது

இன்றுள்ள சூழ்நிலை வேறு. அந்நிய வல்லரசுகளிட மிருந்து தமிழகம் விடுதலை பெற்று விட்டது. தமிழ் வழங்கும் நிலம் தனியரசு நாடாக அமைந்துவிட்டது. தமிழ் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதோடு, கல்லூரிகளில் பயிற்சி மொழியாக வரும் காலமும் நெருங்கி விட்டது. இந்தச் சூழ்நிலையில் தமிழ் மொழிக்குப் புதுவாழ்வு தேடவேண்டிய பொறுப்பும், தமிழ்ப் பயிரில் கலந்திருக்கும் பிறமொழிக் களைகளை *அவசியமான அளவில்* அகற்ற வேண்டிய கடமையும் தமிழருக்கு உண்டு. ஆனால், தமிழைத் திரும்பவும் சங்க காலத்தில் இருந்த நிலைக்குக் கொண்டு வருவது சாத்தியமில்லை என்பதையும் உணர வேண்டும். அப்படி ஒரு நிலை ஏற்பட்டிருப்பது தமிழுக்கு நேர்ந்த விபத் தன்று; உலகநாடுகளோடும், மதங்களோடும், இனங்களோடும் தமிழகத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கமான உறவின் விளைவாகும். இந்த விளைவு உலகமொழிகள் அனைத்துக்குமே ஏற்பட்டுள்ள தென்பதை வரலாறு உணர்த்தும்.

நாத்திகத்தை வளர்ப்பதா ?

புறச் சமயங்களான சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்துவம் ஆகிய அனைத்தும் தமிழகத்தில் நிலைபெற்று விட்டன. அவற்றைத் தழுவிய சாத்திர—தோத்திர நூற்கள், தமிழ் இலக்கியக் களஞ்சியத்திலே இரண்டறக்கலந்து விட்டன. அவற்றைத் தமிழன்னையின் திருமேனியை அலங்கரிக்கும்அணிகளாகக் கருதி இனியும் கௌரவித்து வரவேண்டும். கௌரவிக்க மறுப்பது ‘ தமிழ்ப்பற்று ’ என்ற போர்வையில் ஆத்திகத்தை அழித்து, நாத்திகத்தை வளர்ப்பதாகும்.

தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்திய மராத்திய, விசய நகர, மொகலாய, வல்லரசுகள் அடியோடு அழிந்துவிட்டன என்றாலும், அந்த அரசுகளால் தமிழகத்தில் குடியேற்றப் பட்ட பிறமொழிகளைப் பேசும் மக்கள், தமிழகத்தையே

தாயகமாகக் கொண்டுவிட்டனர். வீட்டுமொழி வேருனாலும், நாட்டு மொழியாகத் தமிழையே ஏற்றுத் தமிழரோடு தமிழராகக் கலந்துவிட்டனர். அவர்களையெல்லாம் தமிழரல்லாதாராக—தமிழகத்துக்கு அன்னியராகச் செய்யும் வகையில் நமது மொழிக் கொள்கை இருக்கக் கூடாது.

தமிழர் தொகை பெருக வழி

தமிழின் சேய்மொழிகள் எனப்படும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் தொகை சுமார் 7 கோடியாக இருக்க, தாய்மொழியான தமிழைப் பேசுவோர் தொகை 3 கோடிக்கும் குறைவாக இருக்கக் காண்கிறேம். இதனையும் குறைத்துவிடக் கூடிய வகையிலல்லாமல் கூட்டுவதற்கான வழியில் நமது மொழிக் கொள்கை வளர்ந்துகொடுப்பதாக இருக்க வேண்டும். அதற்கான ஒரே வழி தமிழகத்தின் நிரந்தரக் குடிகளாகவுள்ள இஸ்லாமியர்,கிறிஸ்தவர் ஆகியபுறச் சமயத்தினரையும், தெலுங்கர், மராத்தியர், கன்னடர் வழியில் தோன்றி தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டுவிட்ட இரு மொழியினரையும் தமிழ் இனத்தவராக ஏற்றுக்கொள்வதேயாகும். அதற்கேற்ப நமது மொழிக் கொள்கை அமையவேண்டும்.

தமிழின் நிழலில் பிற மொழிகள்

தமிழகத்திலுள்ள இருமொழியினர், தங்களுடைய வீட்டு மொழியைக் கற்க விரும்புவார்களானுல், நாட்டு மொழியான தமிழைப் புறக்கணிக்காத வகையில் அதனை அனுமதிக்க வேண்டும்.

அப்படியே, ஆங்கில ஆட்சி வெளியேறி விட்டாலும், ஆங்கில மொழி தமிழகத்தில் அகற்ற முடியாத அளவில் தமிழர் வாழ்விலே பின்னிப் பிணைந்து விட்டது. 'ஆங்கிலோ-தமிழர்' என்ற ஓர் உப இனமும் உருவாகி விட்டது. அவர்களையும் தமிழினம் ஜீரணித்துக்கொள்ள வேண்டும்.

அறிவு மொழியாக—உலக மக்களோடு தொடர்பு கொள்ளும் கருவி மொழியாக ஆங்கில மொழியைத் தமிழர் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கேற்பவும், நமது மொழிக் கொள்கை உருவாக வேண்டும்.

இந்தி மொழி இந்தியாவின் பொது மொழியாகிவிட்ட காரணத்தால், அதனையும் கற்பது தமிழர் கடமையாகிறது. இந்தி மொழியைப் பயின்று அதன் மூலம் தமிழருடைய இலக்கியங்களை இந்தியா முழுவதற்கும் வழங்க வேண்டும்.

மற்று, சமய உணர்வு காரணமாக சமஸ்கிருதம், அரபு, லத்தீன் ஆகிய மொழிகளின்பால் தமிழ் மக்களில் சிலரோ பலரோ பற்றுக் கொள்வது இயற்கை. அதனைச் சமயவழிப் பட்ட உரிமையாகவும் அவர்கள் கருதுவது கண்கூடு. உலகியலை யொட்டி இந்தச்சமய மொழிப் பற்றுதலையும் நாம் கௌரவிக்க வேண்டும்.

மேலே நாம் கூறியவை அனைத்தும் தமிழினத்தவரிலே தனித் தனிச் சிறுபான்மையினரைப் பற்றிய பிரச்சனைகள் தாம். அந்தச் சிறுபான்மையினருக்கு மொழித் துறையில் நாம் வழங்கும் தனிச் சலுகைகளால் தமிழ் அழிந்துவிடும் என்று அஞ்சத் தேவையில்லை. தமிழின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கேடு இல்லா வகையில் இந்தச் சலுகைகளை வழங்க முடியும்.

‘ புனிதப் போர் ’ தோன்றுவதா ?

சமயம் காரணமாகவோ, விஞ்ஞான வளர்ச்சியைக் கருதியோ, பிறமொழிகளுக்குச் சிறிதளவு சலுகை காட்டும் போது அம்மொழியினுடைய கலைச் சொற்களும், பெயர்ச் சொற்களும் தமிழில் கலப்பது இயற்கை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். ***இதனை மறந்து தனித் தமிழ்க் கட்சி பேசினால், மொழி காரணமாக ஒரு “புனிதப் போர்” தோன்றி, தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைத்துவிடும்.***

தமிழினத்தைச் சார்ந்த மக்கள், அக-புறச் சமயங்களைத் தழுவி வாழ்க்கை நடத்தத் தொடங்கிய நாளிலிருந்து தமிழல்லாத பிறமொழிகளைச் சார்ந்த கலைச் சொற்கள் பலவற்றையும், பயன்படுத்தலாயினர். புத்தசமயத் தமிழர்கள்,

"புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி"

என்ற பாலி மொழி மந்திரத்தை ஓதுகின்றனர். இஸ்லாமியத் தமிழர்கள்,

"பிஸ்மில்லா ஹிர்ரஹிமான் நிர்ரஹிம்"

என்கின்றனர். கிறிஸ்துவத் தமிழர்கள் 'ஆமின்' என்கின்றனர். வைணவர்கள், 'ஓம் நமோநாராயணுய' என்கின்றனர்.

சைவத் தமிழர்கள், 'நமச்சிவாய' என்ற ஐந்தெழுத்தை மந்திர மொழியாகக் கொண்டுள்ளனர். இதெல்லாம் பிற மொழி வாக்கியங்கள்தாம் என்பதில் ஐயமில்லை. அதற்காக அவற்றைத் தமிழர் ஓதக் கூடாதென்ருே, அவர்கள் எழுதும் சமய வழிப்பட்ட தமிழ் நூற்களில் இந்த வாக்கியங்களைப் புகுத்தக் கூடாதென்ருே "கட்டளை"யிட முடியுமா?

திரும்பவும் சொல்கிருேம், 'தமிழர்' என்ற இன வேலியைக் கடந்து உலக மக்களோடு உறவு கொள்ளக் கூடியது சமயம். இந்த உண்மையை உணர வேண்டும்.

உலகத்தோடு, ஒத்து வாழ் !

சமயம் மட்டுமல்ல ; அரசியலும் அத்தகையதே. இந்தியர் அனைவரும் ஒரே அணியில் நின்று விடுதலைப்போர் நடத்திய காலத்தல் "வந்தேமாதரம்" என்ற சொல், விடுதலை வீரர்களுக்கு உள்ளக் கிளர்ச்சி தரும் மந்திரமாக இருந்தது. அது தமிழ்ச் சொல் அல்ல.

'கம்யூனிஸம்,' 'சோஷலிஸம்' போன்ற சொற்கள் தமிழ் மொழிக்கு அன்னியமானவை என்பதற்காக அந்த சர்வதேசக் கலைச் சொற்களைத் தமிழக அரசியல் வாதிகள் துறக்க முடியுமா ? துறந்தார்களா ?

மறுமலர்ச்சி தேவை

தமிழகத்திலுள்ள சமய வாதிகளிடையேயும் தமிழின் தனித் தன்மையைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்ச்சி வலுத்து வருவதைப் பார்க்கிறோம். பெரியவாச்சான் பிள்ளை மணிப்பிரவாள மொழியிலியற்றிய பிரபந்த 'ஈட்டி'ற்குத் தமிழாக்கம் வெளிவந்திருப்பதொன்றே இதற்குச் சான்றாகும்.

வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களைப் புறக்கணித்து அவற்றிற்குப் பதிலாகப் பிறமொழிச் சொற்களைக் கையாள்வது வெறுக்கப்பட வேண்டும். தமிழில் போதிய புலமையில்லாதவர்கள், பிறமொழிச் சொற்கள் எவை, அவற்றிற்கிணையான தமிழ்ச் சொற்கள் எவை என்று அறியாமல் கலப்படம் செய்வது இயற்கை. ஆனால், தமிழில் புலமையுள்ள பெருமக்கள் இந்தத் தவற்றைச் செய்யக்கூடாது. புலமை யிருந்தும், வேண்டுமென்றே தேவையற்றவிடத்தும் பிற மொழிச் சொற்களைத் தமிழில் திணிப்பார்களானால், அது மன்னிக்க முடியாத பெருங் குற்றமாகும். அதனைக் கண்டிப்பது தமிழர் கடமை.

இலக்கணவழித் திருத்தம்

தேவையை முன்னிட்டுப் பிறமொழிச் சொற்களைத் தமிழில் கலந்தெழுத நேருங் காலத்தும், தமிழ் இலக்கண மரபுக்கேற்பவும், ஒலி இன்பத்திற்குப் பொருந்தவும் அந்தச் சொற்கள் திருத்தப்பெற வேண்டும். 'கர்மா' என்ற வட சொல் கருமம் என்றும், 'புஸ்தக்' என்பது புத்தகம் என்றும், 'சுப்ரஹ்மண்யம்' என்பது சுப்பிரமணியம் என்றும் திருந்து வதைச் சான்ருகச் சொல்லலாம்.

ஜ, ஸ, ஷ, ஹ என்ற கிரந்த எழுத்துக்கள் தமிழில் கலந் துள்ளன. அவை அப்பட்ட தமிழ் எழுத்துக்கள் அல்ல என்ருல், அப்படியே சுயமான தேவநாகரி எழுத்துக்களும் அல்ல. இரு மொழிக்கும் பொதுவாக, தமிழின் வரி வடிவத் திற்கேற்ப திருத்தப்பெற்ற எழுத்துக்களாகும். ஆகவே, தேவைப்படுமிடத்து அவற்றைப் பயன்படுத்துவது தவ றன்று. தனித்தமிழ்க் கட்சியின் தலைவராக விளங்கிய மறை மலையடிகள்கூட இந்தக் கிரந்த எழுத்துக்களைக் கையாண் டுள்ளார். ஆனுல், இந்தக் கிரந்த எழுத்துக்கள் மிகக் குறைந்த அளவில்தான் தேவைப்படுகின்றன என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். தமிழிற் புலமையுடையோர் இந்த எழுத்துக்களின் தேவையை வெகுவாகக் குறைத்து விட முடியும்.

கிரந்த எழுத்துக்கள் தேவையா ?

சான்ருக, தேவார, திருவாசக, திவ்யப்பிரபந்தப் பாடல் கள் இயற்றப்பட்ட காலத்தில் கிரந்த எழுத்துக்கள் தோற்று விக்கப்படவில்லை. அதனுல், தமிழ் எழுத்துக்களைக்கொண்டே வடமொழிப் பெயர்களையும், கலைச்சொற்களையும் புலவர்கள் தமிழிலேயே வரைந்துள்ளனர். அதற்கு எடுத்துக் காட்டாகச் சில சொற்களைக் கீழே தருகிருேம்.

விபீஷணன்	—	வீடணன்
லக்ஷ்மணன்	—	இலக்குவன்
இந்திரஜித்தன்	—	இந்திரசித்தன்
இராக்ஷஸர்	—	இராக்கதர், அரக்கர்
சாஸ்திரம்	—	சாத்திரம்
ஜலம்	—	சலம்
புஸ்தகம்	—	புத்தகம்

கிரந்த எழுத்துக்களுக்குப் பதிலாக தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்துவதில் தவறில்லை யென்றாலும், ஒலியின்பமும், பொருளும் கெடாத வகையில் செய்ய வேண்டும். ஜலம் என்பதனை 'சலம்' என்று எழுதினால் நீர், 'மலை'யாக மாறி நம்மை மயக்கிவிடும்.

ஷேக்ஸ்பியர் என்ற பெயரை செகசிற்பியர் என்று எழுதுவது நகைப்புக் கிடமாகும். சாக்ரடீஸ் என்பவரை சோக்ரதராக மாற்ற நமக்கு உரிமை யில்லை. அப்படியே 'பாஷை'யை 'பாடை' யாக்குவதும் அமங்கலமாகும். இந்த மாதிரி இடங்களில் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தி நயத்தையும் பொருளையும் காப்பதே அறிவுடமை யாகும்.

மற்று, வழக்கிலுள்ள, மக்கள் எளிதில் புரிந்து கொள்ளத் தக்கதான நல்ல தமிழ்ச் சொற்களை விடுத்து பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்துவதும் தவறாகும். திருமணம்— கலியாணம் என்ற வழக்குச் சொற்களிருக்க, 'விவாஹம்'—'பாணிக்கிரஹணம்' என்ற வடசொற்களைப் பயன்படுத்தத் தேவையில்லை.

இப்படியே, தமிழ் மக்களுடைய வாழ்க்கையில் நடைபெறும் விழா ஒவ்வொன்றுக்கும் நல்ல தமிழிலே, இனிய ஓசையிலே ஏராளமான சொற்கள் இருக்கின்றன. அவையெல்லாம் மறைந்து போகக்கூடிய வகையில் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவது தமிழுக்குத் தீங்கு செய்வதாகும். இது, கலப்பன்று; கலப்படம்!

தமிழில் கலைச்சொற்கள்

சமய வழிப்பட்ட கலைச் சொற்களிலும் வடமொழிச் சொற்களுக்கு நிகரான, ஓசை யின்பத்திலும் வைப்பு முறையிலும் வடமொழியோடு போட்டியிடத்தக்க வகையில் நல்ல தமிழ்ச் சொற்களைத் தந்திருக்கின்றனர் புலவர்கள். மாதிரிக்குச் சிலவற்றை இங்கே தருகிறோம் :

பஞ்ச பூதங்கள்	—	ஐம்புலன்கள்
சதுர் வர்ணம்	—	நால்வருணம்
சந்யாசம்	—	துறவு
யாகம்	—	வேள்வி
சத்தியம்	—	மெய்ம்மை
மோட்சம்	—	வீடு
ஸப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தம்	—	சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்
கிரகஸ்தன்	—	இல்வாழ்வான்
பிர்மா, விஷ்ணு, ருத்ரன்,	—	அரி, அரன், அயன்
பிதிரர்	—	தென்புலத்தார்
பிதிர்லோகம்	—	புத்தேளிர் உலகு

பிறமொழிச் சொற்களோ, அல்லது எழுத்துக்களோ தேவை யில்லாமல் பேசவும் எழுதவும் முடியாதென்று நாம் கூறவில்லை. அது பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியா களுக்கோ, பண்டிதர்களுக்கோ சாத்தியமாகலாம். மாண வர்களுக்குத் தமிழ் போதிக்கும் வகுப்பு அறைகளிலே புலவர் பெருமக்கள் தூய தமிழிலே சொற்பொழிவாற்றலாம். அப்ப டியே, மேல் வகுப்புகளுக்குப் பாடங்களாக அமையும் நூல் களையும் தூய தமிழிலே எழுதலாம். இவையெல்லாம், மொழித்துறைக்கான விதியன்று; விதிவிலக்கேயாம்.

விதி விலக்குத் தரலாம்!

நூற்றுக்கு நூறுபேரும் கல்வி கற்றவர்கள் ஆகவேண் டும் என்ற கொள்கை நடைமுறைக்கு வந்துகொண்டிருக்

கும் காலத்தில் நாம் வாழ்கிறோம். சாதாரண மக்களெல்லாம் அரசியல் விழிப்புப் பெற்றுள்ள ஜனநாயக சமுதாயத்தில் நாம் அங்கம் வகிக்கிறோம். பட்டி தொட்டிகளி லெல்லாம் இலக்கிய மாநாடுகள் நடைபெறுகின்றன. எழுதப் படிக்கத் தெரிந்த எளிய மக்களெல்லாம் இலக்கிய அறிவு பெற்று வருகின்றனர். *இந்நிலையில், 'பண்டிதர் தமிழ்'மொழித் துறையின் 'விதி'யாக முடியாது. 'பழகு தமிழ்'தான் 'விதி'யாக ஏற்கப்படும். பண்டிதர் தமிழ் விதிவிலக்காகவே கருதப் படும். அப்படிச் சிலருக்கு 'விதி விலக்கு' அளிக்க வேண்டியதும் அவசியம்தான். எந்த மொழியிலும் இந்த நிலை உண்டு.*

பொதுவாக, தொல்காப்பியர் காலத்துத் தமிழ், நடைமுறைக்கு வரவேண்டுமென்ற தனித் தமிழ்க் கட்சியோ, அல்லது மணிப்பிரவாளத்தைப் பயன்படுத்தி, வாழையடி வாழையாகப் புலவர் பெருமக்கள் வளர்த்துவந்த தமிழில் கலப்படம் செய்யவேண்டும் என்பதோ, தமிழரிலே ஒரு சில நபர்களுடைய எண்ணங்கள்தாம். தமிழ் மக்களின் ஆதரவு பெற்ற இயக்கங்கள் அல்ல. எனவே, அவற்றை மறந்து, மக்கள் தமிழுக்கு வாழ்வளிக்க-வளர்ச்சிதர முயலுவோமாக!

வாழிய செந்தமிழ்!
வாழ்க நற்றமிழர்! —பாரதி.

ம. பொ. சி. எழுதிய நூல்கள்

இலக்கியம்

வீரக் கண்ணகி	2-50
வள்ளுவர் வகுத்த வழி	0-50
இலக்கியச் செல்வம்	2-00
சிலப்பதிகாரமும் தமிழரும்	0-50
எங்கள் கவி பாரதி	0-50

கட்டுரை

கட்டுரைக் களஞ்சியம்	2-50
இன்பத் தமிழகம்	1-75
முரசு முழங்குகிறது !	1-25
வானொலியில் ம. பொ. சி.	1-50
இலக்கியத்தின் எதிரிகள்	0-50
ம. பொ. சி. கூறுகிறார் !	1-00

அரசியல்

சுயாட்சியா, பிரிவினையா?	1-00
தமிழன் குரல்	1-25
பிரிவினை வரலாறு	0-50
தமிழரசா—திராவிடஸ்தானா?	0-50

வரலாறு

சுதந்திர வீரன் கட்டபொம்மன்	1-50
வீரபாண்டியக் கட்டபொம்மன்	1-75
கப்பலோட்டிய தமிழன்	1-75
தமிழர் கண்ட காந்தி	0-50
சுதந்திரப் போரில் தமிழகம்	0-50
கயத்தாற்றில் கட்டபொம்மன்	0-50

* * *

தொகுப்பு நூல்

தமிழகம் தந்த ம. பொ. சி.	2-00
ம. பொ. சி. வாழ்க்கை வரலாறு	1-00
தலைவர் ம. பொ. சி.	2-00

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4